







# தமிழரசு



1-3-1993 ரூ.1

பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்




தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108



மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 45-வது பிறந்த நாளையொட்டி மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் முதல்வரின் இல்லத்துக்குச் சென்று, முதல்வர் அவர்களுக்குப் பூங்கொத்துக் கொடுத்து வாழ்த்துக் கூறினார் (24.2.'93).

# இந்த இதழில்...


முதல்வரின் முத்துக்கள் ... 2
ஆசியாவின் ஹாலிவுட் ... 4
உழவர் வாழ்வு உயர! ... 11
தென்னார்க்காடு மாவட்டத்தில் மனிதச் சங்கிலி ... 15
புதுக்கோட்டை மாவட்டம்: நலத்திட்டப் பணிகள் ... 17
நாகையில் அறிவொளி இயக்கம் ... 18
அரசு அலுவலர்களுக்குச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் பயண விடுப்புச் சலுகைகள் ... 21
தருமபுரி மாவட்டத்தில் பட்டுத்தொழில் வளர்ச்சி ... 24
தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து ... 27
வீர வரலாறு கூறும் நடுகற்கள் ... 29
எரிபொருள் சிக்கனத்திற்கு ஏற்றமுறை ... 35
எண்ணெய்ப் பனை: தமிழ்நாட்டின் காமதேனு ... 39
தியாக தீபம் தில்லையாடி வள்ளியம்மை ... 43



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2024

மாசித் திங்கள் - 18

மலர்: 23 1-3-1993 இதழ்: 17



# முதல்வரின் முத்துக்கள்

■ திறமைக்கும் - நேர்மைக்கும் - வளர்ச்சிக்கும் - உயர்வுக்கும் - லஞ்ச ஊழலற்ற தன்மைக்கும் - எடுத்துக்காட்டான அரசு தமிழக அரசு ஒன்றே எனும் பெயர் எடுக்கும் வகையில் எங்கள் பணி அமையும்.

தமிழகம் தலைநிமிர்ந்து தன் தனித்தன்மை யோடும் தனிச் சிறப்போடும் திகழ உங்கள் பிரதி நிதியாக என்னை அர்ப்பணித்துக் கொண் டுள்ளேன்.

■ தமிழகத்து மக்களின் ஏகோபித்த அன்பினா லும், ஆதரவினாலும் முதலமைச்சராகி இருக்கிற நான் எனது அமைச்சரவை பதவி ஏற்பு விழா விற்கு அழைப்பிதழ் அனுப்பும்போது எனது ஆசிரியருக்குத்தான் முதலில் அதை அனுப்பினேன் என்று உங்களுக்கு அறிவிப்பதில் மிகுந்த பெருமை கொள்கிறேன். ஏனெனில், இன்றைக்கு வாழ்க்கை யில் நான் அடைந்துள்ள உயர்வுக்கெல்லாம் அடிப்படை அமைத்துத் தந்தவர்கள் எனது ஆசிரி யர்களே ஆவர். ஆசிரியர் பணி ஒரு புனிதமான கடமை. தன்னைவிடத் தன் மாணவர்கள் பெருமை பெற வேண்டுமென்ற தாயுள்ளம் கொண்டவர்கள் ஆற்றும் அரும்பணியே ஆசிரியர் பணியாகும்.

■ கல்வி கற்பிப்பது என்பது வெறும் அறிவைப் பெற்று ஆங்காங்கே காணப்படும் செய்திகளை, தகவல்களைச் சேகரிப்பது என்ற எல்லையில் வெறுமனே முடிந்துவிடுவது அல்ல. வாழ்க்கையின் முதன்மையை, முழுமையை, முழுவதுமாக உணர்ந்து கொண்டு, சிறந்த மனிதனாக மாறு வதற்கு நல்ல பயிற்சியை வழங்குவதுதான் கல்வி என்று நாம் கருத வேண்டும். அந்த வகையில் வாழ்வின் அனுபவமே ஒரு வகையில் நாம் கற்கும் கல்வி என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

■ ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சியை ஊக்கு விக்கிற வகையில் உருவாக்கப்பட்டது தான் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்; இதன்மூலம், தமிழகத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகள், போர்க்கால நடவடிக்கைகளின் மூலம் வழங்கப்பட்டு வரு கின்றன.

■ தமிழகத்தின் பண்பாட்டு மையங்களான ஆலயங்களின் புனிதத்தன்மை காக்கப்பட வேண்டும். மரபுகள் கெடாத வகையில் திருக் கோயில்களின் நிர்வாகங்கள் சரியான முறையில் அமைத்துச் செயல்பட வேண்டும். பல்லாயிரக் கணக்கில், பராமரிப்பு இன்றி, பாதிக்கப்பட்டுள்ள புராதனக் கோயில்கள் சிறப்பான முறையில் பரா மரிக்கப்பட வேண்டும். அவற்றின் அன்றாடத் தேவைகள், பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற எங்களுடைய எண்ணம், நாங்கள் அமைத்து இருக் கின்ற ஆலய நிர்வாக வாரியத்தின் மூலம் நிறை வேற்றப்படும் என்பதில் நம்பிக்கை கொண்டுள் ளோம்.

■ காலங்காலமாக நம் நாடு, கல்வியின் பலத்தை உணர்ந்து, சமுதாய கலாச்சார அம்சங்களில் கல்விக்கு முக்கிய இடத்தைத் தந்துள்ளது. சுய வளர்ச்சிதான் கல்வியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகிறது. சுய ஞான வளர்ச்சியைப் பெறுவதே, அறிவைப் பெறுவதன் நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வி பயிலுவதென்பது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்கிறது. தீவிர ஆன்மிக உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து, உணர்வினை அடிப்படையாகக் கொண்ட சமூகப் பண்புகளைக் கடைப்பிடித்து மக்களிடையே அமைதி, நல்லிணக்கம், நல்லுறவு ஆகியவற்றை வளர்க்கும் வகையில் சமுதாய முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபடும் தனி மனிதத் தகுதிகளை வளர்க்கக் கல்வி ஒரு வழிமுறையாகும்.

■ மகாத்மா என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலகச் சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர்.

■ 'கண்ணியத்தின் மறுபெயர் காயிதே மில்லத்' எனப் பேரறிஞர் அண்ணா அவர்களால் புகழப்பட்ட, இந்திய இஸ்லாமிய இனத்தின் புகழ்மிக்க தலைவர்களில் ஒருவரான பெருந்தகை முகமது இஸ்மாயில் அவர்களின் நினைவினை என்றும் பசுமையாகப் போற்றிடும் வகையில், உருவாக்கப் பட்டதுதான் நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டமாகும்.

■ தமிழ்நாடு, சுற்றுலாப் பயணிகளுடைய சொர்க்க பூமி என்றால் அது மிகையாகாது. இது கலையும், கலாச்சாரமும் நிறைந்த நாடு; சுற்றுலா வளங்கள் கொண்ட சரித்திர பூமி; காண்போரைக் கவரத்தக்க எழில்மிகு கோடை வாசஸ்தலங்கள்; தமிழ்ப் பண்பாட்டின் நிலைக் கலன்களாக விளங்கும் பெருங்கோயில்கள்; சிற்பக் கலைக்கு மகுடஞ்சூட்டிய பெருமை; இணையற்ற கலாச்சாரத்தை வெளியுலகிற்குப் பறைசாற்றுகின்ற புராதன பொக்கிசங்கள் நிறைந்ததுதான் தமிழ் நாடாகும்.

■ தலைவர்களுக்கெல்லாம் தலைவர் என்கிற தகுதியும்; தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தமாகவும், பகுத்தறிவுப் பகலவனாகவும், சமுதாய மேம்பாடு, முற்போக்கு எண்ணங்கள், புரட்சிகரச் சிந்தனை ஆகியவற்றைத் தனது வாழ்நாள் முழுவதும் கட்டிக்காத்து வளர்த்து, வெற்றி கண்டவர் தந்தை பெரியார்.

■ ''நடனக் கலை தமிழ்நாட்டின் பழங்கலைகளில் ஒன்றாகும். சங்ககாலம் முதற்கொண்டு, தமிழர்களின் வாழ்க்கையில் நடனம் அல்லது கூத்து மக்களின் உள்ளங்களிலே ஆன்மிக வேட்கையை உருவாக்குவதற்குப் பயன்பட்டுள்ளது. நமது தொல்காப்பியம், ஆடலுக்கு இலக்கணம் கூறும் நூல். சிலப்பதிகாரம், பயிற்றுவிக்கப்பட வேண்டிய நடனக் கலையின் இலக்கணத்தையும், நுட்பத்தையும், பெருமையையும் விளக்குகிற காவியம்.



சுருக்கமாகச் சொன்னால், பல்லவ, சோழ, சேர, பாண்டிய மன்னர்கள் காலத்தில், நடனக்கலை மன்னர்களால் போற்றப்பட்டு, மக்களால் வரவேற்கப்பட்டு, அன்றாட வாழ்க்கையின் இன்றியமையாத ஒரு அம்சமாகக் கருதப்பட்டது. இன்றும் தமிழக நடனக் கலைகளில், தலைசிறந்த படைப்பாகப் பரத நாட்டியம் விளங்குகிறது.

■ உலகத்தின் முதல் மனிதன் தமிழன்! முதல்மொழி தாய்மொழி தமிழ்! முதல் பண்பாடு தமிழ்ப் பண்பாடு! முதல் நாகரிகம் தமிழ் நாகரிகம்! அந்தப் பெருமை மிகு தமிழ் இனத்தின் தலையாய நூல்தான் திருக்குறள்!

■ கோடிக்கணக்கான ஏழைகளின் உதடுகளுக்குப் புன்னகையாகவும் - புது நம்பிக்கையாகவும், இளமைக் காலம்முதல், திரைப்படத்துறையிலும் அரசியல் வாழ்விலும் திகழ்ந்தவர் புரட்சித் தலைவர்.

■ எத்தனையோ தலைவர்களைக் கண்டுள்ளது இந்திய நாடு; ஆனால் மூளை பலமும், இளகிய இதயமும் கொண்ட மாமனிதர்கள், ஒரு சிலரே ஆவர். அவர்களில் முதன்மையானவர்கள்தான், அண்ணல் காந்தியடிகளும், பேரறிஞர் அண்ணாவும், நம் இதய தெய்வம் புரட்சித் தலைவரும் ஆவர்.

■ ''மக்களின் வரிப்பணம் மக்கள் நல்வாழ்வுக்கே பயன்பட வேண்டும்'' என்றார் பேரறிஞர் அண்ணா.

''திட்டங்களின் பயன்கள் ஏழை எளியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும்'' என்றார் புரட்சித் தலைவர்.

இவ்விரு தலைவர்களின் அடிச்சுவட்டில் நடைபோடும் எங்கள் அரசு - அவர்கள் காட்டிய இந்த உயரிய நோக்கங்களைத் தனது இலக்காகக் கொண்டு, எவ்வளவு தெளிவாகவும், தீர்மானமாகவும், உறுதியாகவும் காரியமாற்றி வருகிறது என்பதை, நாங்கள் நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களில் இருந்து, மிகத் தெளிவாக அனைவரும் அறிந்துகொள்ளலாம்.

■ ''எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பது மட்டுமல்லாமல், எத்தகைய மக்களுக்காகத் திட்டங்கள் தீட்டுகிறோம்' என்பதற்கே முதலிடம் தந்து, நாங்கள் மக்கள் நலத் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.



நான்காம் அட்டைப்படக் கட்டுரை:

# ஆசியாவின் ஹாலிவுட்

தமிழ்த் திரையுலகின் நீண்ட நாள் கனவை நனவாக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் மகத்தானதொரு திரைப் பட நகரை உருவாக்குவது எனத்தீர் மானித்தார்.

அதன்படி, திரையுலகப் பிரமுகர் அனைவரும் பிரமிக்கும் வகையில் திரைப்பட நகரம் உருவாகி வரு கிறது.

1992 மே திங்களில் நடை பெற்ற இனிமையானதொரு விழா வில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

'ஆசியாவின் ஹாலிவுட்' என்ற பெருமையினைப் பெற இருக்கின்ற,



எம். சண்முகம்
தனி அலுவலர்
திரைப்பட நகர்
சென்னை-600 113



இந்தத் திரைப்பட நகரம் தரமணியில் 86 ஏக்கர் நிலப்பரப்பில் சிறப்பாக உருவாகி வருகின்றது. இந்தப் பெருமைமிகு நகரில், குறைந்த செலவில் சிறந்த படங்களை உருவாக்க விரும்பும் திரைப்பட, வீடியோ பட, தயாரிப்பாளர்களுக்குத் தேவையான ஏராளமான படப்பிடிப்புத் தளங்களை வழங்கும்.

இந்நகரில், வயல் வெளிகள் உருவாகி வருகின்றன. தென்னந் தோப்புகளும் மாந்தோப்புகளும் படப்பிடிப்புகளுக்கு உருவாகி வரும் கிராமத்தை அலங்கரிக்கின்றன.அந்தக் கிராமத்திலே குளம் உண்டு.

அக்ரஹாரத் தெரு உண்டு, கடைத் தெருக்கள் உண்டு, பள்ளி உண்டு, ரயில் நிலையமும், பஞ்சாயத்துக்கள்கூட பெரிய ஆலமரமும் உண்டு. அய்யனார் சிலையும், காத்தவராயன் சிலையும், கிராமத்தின் நுழைவு வாயிலை அலங்கரிக்கின்றன நகரத்தின் அங்கமாக விளங்கக் கூடிய பல அடுக்கு மாடிக் கட்டிடங்களும் உண்டு. நடுத்தர, ஏழை மக்களின் கட்டிடங்களும் உண்டு. கூட்டுறவு நிலையம், பால் பூத்து, தபால் நிலையம் என்று பலவும் உண்டு. ஒரு நடுத்தரமான இரயில்வே நிலையமும், கிராம இரயில் நிலையமும், ஜட்கா ஸ்டாண்டுடன் உள்ளது. இந்தத் திரைப்பட நகரத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில், கோயில், கிறிஸ்துவ ஆலயம், மசூதி என மூன்றும் உண்டு. ஒரு பஸ் ஸ்டாப்புடன் கூடிய தெரு, வகுப்பறை, ஆபரேஷன் தியேட்டருடன் கூடிய மருத்துவமனை என்று படப்பிடிப்புக்குத் தேவையான ஒவ்வொரு அங்கமும் மிகுந்த கவனத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அழகான ஒரு ஏரி, அருகிலுள்ள ஒரு தீவுடன் மூங்கில் பாலத்தால் மிக நேர்த்தியாக இணைக்கப்பட்டுள்ளது. அருகே படகுக் குழாமும் அமைக்கப்பட்டுள்ளது. ஒன்றரை கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாயின் குறுக்கே பல வடிவங்களில் பாலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன் கரையருகே ஒரு சேரியும், நடுத்தர பிரிவினரின் வீடுகளும், பெரியதொரு பங்களாவின் உட்புறமும் வெளிப்புறமும் படபிடிப்புக்குத் தேவையான வகையில் நேர்த்தியான வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

அகில உலகத் தரத்திற்கேற்ப இங்குள்ள மிகப்பெரிய ஸ்டுடியோ முற்றிலுமாக மாற்றியமைக்கப்படுகிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு ஏற்ப, இந்த நகரத்தில், படப்பிடிப்பு முடிந்த பிறகு படத் தயாரிப்புக்குத் தேவையான ரீ-ரெக்கார்டிங் தியேட்டர், டப்பிங் தியேட்டர், வீடியோ ஸ்டுடியோ, எடிட்டிங், மற்றும் processing ஆகியவை அகில உலகத் தரத்திற்கேற்ப அமைக்கப்பட்டு வருகிறது.

ஆராய்ச்சிகளுக்கு ஏற்ற வகையில் திரைப்பட ஆவணக் காப்பகமும் (Film-archive), ஒரு நூல் நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது.

மொகலாயத் தோட்டங்களை ரசிக்க நமது படத் தயாரிப்பாளர்கள் இனிமேல் காஷ்மீருக்கும், டெல்லிக்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை. இங்கிலாந்து புல்வெளிகளும், இத்தாலியத் தோட்டமும், கண்ணைக் கவரும் வகையில் இங்கே உருவாகி வருகின்றன. ஒரு ஜப்பானியத் தோட்டமும், ஒரு ஜப்பானிய வீடும், ஒரு ஜப்பானியக் கோவிலும் இங்கே உருவாகி, இந்நகரம், ஒரு குட்டி ஜப்பானாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இவை தவிர, நீச்சல் குளம், நீருக்கடியில் படப்பிடிப்புச் செய்தல் போன்ற நவீன வசதிகள் நமது படத் தயாரிப்பாளர்களைப் பிரமிக்க வைக்கும் வகையில் உருவாகி வருகின்றன. இந்த வசதிகளையெல்லாம் நன்கு பயன்படுத்திக் கொண்டு ஒரு படத் தயாரிப்பாளர் செய்ய வேண்டியதெல்லாம் தமது படபிடிப்புக் குழு மற்றும் கதை வசனத்துடன் திரைப்பட நகருக்கு வந்து குறைந்த செலவில் படத்தை முடித்துக் கொண்டு போக வேண்டியது தான்!

தன்னிகரில்லா வகையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிந்தனையில் உதித்த இத்திரைப்பட நகரம் இந்த நூற்றாண்டில், சென்னையின், ஏன் நமது நாட்டின் சாதனையாக உருவாகி இந்த ஆண்டின் இறுதியில் தயாரிப்பாளர்களுக்கு படப்பிடிப்புக்குத் தயாராக விளங்கும். இது ஒரு சாதாரண அறிவிப்பு அல்ல. சமீபகாலமாக இங்கே வருகை புரியும், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஸ்விட்ஸர்லேண்ட், சிங்கப்பூர், ஹாங்காங் மற்றும் ஜப்பானிலிருந்து இங்கு வருகை புரிந்தோரின் ஒருமித்த கருத்தாகும்!

அனைத்து நவீன வசதிகளையும் ஒருங்கே தன்னகத்தே கொண்ட இந்தத் திரைப்பட நகரம் தென்னிந்தியத் திரைப்படத் தயாரிப்பாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பதில் ஐயமில்லை!

# இரயில்வே பட்ஜெட்

## சாதாரண மக்களைப் பாதிக்கும்:

### மாண்புமிகு முதல்வர் அறிக்கை



**பா**ராளுமன்றத்தில் 1993 பிப்ரவரி 24-ஆம் நாள் மத்திய அரசின் இரயில்வே துறை அமைச்சர் அளித்த இரயில்வே நிதிநிலை அறிக்கையில் பயணக் கட்டணத்தையும், சரக்குக் கட்டணத்தையும் உயர்த்தியிருப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன்.

பயணக் கட்டணத்தை நேரடியாக உயர்த்தி இருப்பது, குறிப்பாக 2-ஆம் வகுப்புப் பயணக் கட்டணத்தை உயர்த்தி இருப்பது, சாதாரண மக்களை மிகவும் பாதிக்கும். சரக்குக் கட்டணத்தை உயர்த்தி இருப்பதும், அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு செல்ல, அளிக்கப்பட்டிருந்த சலுகைகளைத் திரும்பப் பெற்றுக் கொண்டதும் பணவீக்கத்தை அதிகப்படுத்தி, சாதாரண மக்களின் சுமையை அதிகரிக்கும்.

சரக்குக் கட்டணத்தை உயர்த்தியதால் மக்களின் அன்றாடச் செலவு மிகவும் அதிகரிக்கும். ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவர். பல்வேறு நடவடிக்கைகள் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் மத்திய அரசு செயலில் வேறுவிதமாக நடந்து கொள்கிறது. இரயில்வே பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பயணக் கட்டண, சரக்குக் கட்டண உயர்வு மைய அரசு தன்னுடைய எண்ணங்களைச் செயல்படுத்துவதில் தீவிரமாக இல்லை என்பதையே காட்டுகிறது.

விரைவு வண்டிகளிலும், சாதாரண வண்டிகளிலும் இரண்டாம் வகுப்புப் பயணக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. அன்றாட வாழ்க்கைக்கே அவதிப்படும் மக்கள்தான் இரண்டாம் வகுப்புப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். இது அவர்களை நேரடியாகப் பாதிக்கும். இரயிலில் பயணம் செய்வது சாதாரண மனிதர்களுக்கு மலிவாக இருந்து வந்தது. இது இப்பொழுது பேருந்து பயணத்தைவிட மிகவும் அதிக செலவாகக்கூடியதாகிவிட்டது. உதவித் தொகைகளைச் சீர்படுத்தி சாதாரண மக்களுக்கு மலிவான பயணத்தை வழங்குவதே மத்திய அரசின் முயற்சியாக இருந்திருக்க வேண்டும்.

புறநகர் இரயிலில் அனைத்து வகுப்புக் கட்டணத்தை உயர்த்தியது, குறிப்பிட்ட தொகை வருமானமாகப் பெறுபவர்களையும் சிறு வியாபாரிகளையும் மிகவும் பாதிக்கும். பயணக் கட்டண உயர்வினால் சாதாரண மக்களிடையே ஏற்பட்ட பாதிப்பைத் தவிர்த்திருக்கலாம்.

பணவீக்கத்தின் பாதிப்புடன் கூடிய சரக்குக் கட்டண உயர்வு சாதாரண மனிதனைப் பாதிக்கும். தானியங்கள், பருப்பு, டீசல், சர்க்கரை போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குச் சரக்குக் கட்டணத்திலிருந்த சலுகை விலக்கிக் கொள்ளப்பட்டதென்பது, இப்பொருட்களின் விலையேற்றத்திற்கு வழிகோலும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான் நமது கொள்கை என்று அறிவித்துவிட்டு சரக்குக் கட்டணத்தை-குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களின் சரக்குக் கட்டணத்தை உயர்த்தியுள்ளது ஆச்சரியப்படுத்தியுள்ளது.

சாதாரண மக்களையும், நமது பொருளாதார ஸ்திரத் தன்மையையும், கவனத்தில் கொண்டு மத்திய இரயில்வே அமைச்சர் கொண்டுவந்துள்ள இரயில்வே பயணக் கட்டண உயர்வையும், சரக்குக் கட்டண உயர்வையும், மறுபரிசீலனை செய்ய வேண்டும் என நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

## போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு ஒய்வு கால

# சேமநலநிதித் திட்டம்



தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களுக்கு அவர்கள் ஒய்வுபெற்ற பிறகு ஏற்கெனவே அவர்களுக்குள்ள பிராவிடெண்ட் நிதி உதவி, கிராச்சுவிடி நிதியுதவி ஆகிய இரண்டுக்கு மேலும் மூன்றாவது சலுகையாக 'ஒய்வு காலச் சேமநல நிதித் திட்டம்' ஒன்றினைச் செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இது, இந்திய நாட்டில் வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை செயல்படுத்தாத ஒரு புதிய திட்டமாகும்

இத்திட்டத்தின்படி 1.9.1992 முதல் அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஒய்வு பெறும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் மாதந் தோறும் ஒரு குறிப்பிட்ட தொகை அவர் இறக்கும் வரை கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு ஒய்வு காலச் சேம நலநிதியாக வழங்கப்படும்.

1.9.1992 முதல் 31.8.1997 வரை பணியிலிருந்து ஒய்வு பெறுவோர் மாதந்தோறும் பெறும் தொகை ரூ.300.

1.9.1997 முதல் 31.8.2002 வரை ரூ.450

1.9.2002 முதல் 31.8.2007 வரை ரூ.600

1.9.2007 முதல் 31.8.2012 வரை ரூ.750

1.9.2012 முதல் 31.8.2017 வரை ரூ.1000

1.9.2017 முதல் 31.8.2022 வரை ரூ.1,250

பணியிலிருக்கும்போது ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அந்தத் திட்டத்தின்படி தொழிலாளருடைய நியமனதாரருக்குத் தொழிலாளர் இறந்த தேதியிலிருந்து 15 ஆண்டுக் காலத்திற்கு நிதி உதவி வழங்கப்படும்.

இதற்காக ஒவ்வொரு தொழிலாளியும் மாதந்தோறும் தன்னுடைய பங்குத்தொகையாக ரூ.50 செலுத்தவேண்டும். நிர்வாகம் தனது பங்காக ஒவ்வொரு தொழிலாளிக்கும் தலா ரூ.1,000 தொகையை 40 சம மாதத் தவணைகளில் மாதம் ரூ.25 வீதம் செலுத்தும். இந்த நிதியை நிர்வகிக்கத் தனியானதொரு டிரஸ்ட் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும். நிதி வசதிக்கேற்ப உதவி நிதியின் அளவும் எதிர்காலத்தில் அதிகரிக்கவும் கூடும்.

இத்திட்டத்தின்கீழ் பின்வரும் நபர்கள் 22.2.93 அன்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களிடமிருந்து சேமநல நிதி உதவியினைப் பெற்றார்கள்.

1. திரு கே. நாராயணசாமி, ஒட்டுநர், பல்லவன் போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
2. திரு. எம். கோபால், ஓட்டுநர், போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
3. திரு. வி. தேவேந்திரன், ஓட்டுநர், போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
4. திரு. டி.என். பாலன், நடத்துநர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00
5. திரு. டி. அய்யாதுரை, ஓட்டுநர் பயிற்சியாளர், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் ... ரூ.300.00

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras–600 001.

## Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE



# 2,730 மனுதாரர்களுக்கு 3.77 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள்!

## மாண்புமிகு முதல்வர் வழங்கினார்

**சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த 2,730 மனுதாரர்களுக்கு 3.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.**

**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் சிதம்பரனார் மாவட்டத்திலிருந்து மனு கொடுத்திருந்த ஆயிரக்கணக்கான பேர்களில் தகுதியானவர்கள் 2,730 நபர்களைத் தேர்ந்தெடுத்து ரூபாய் 3.77 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை 22.2.93 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

சமூகநலத்துறையின் சார்பில் புரட்சித்தலைவி பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 15 பெண்களுக்கு ரூ.1.95 இலட்சம் நிதியுதவியும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின்கீழ் 70 பெண்களுக்கு ரூ.3.50 இலட்சம் நிதியுதவியும், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு திட்டம், விதவை மறுமண உதவி, விதவை மகள் திருமணம், தையல் இயந்திரம் வழங்குதல், காதொலிக் கருவிகள் வழங்குதல், இலவச மூன்று சக்கர வண்டி, ஊனமுற்றோருக்குக் காலிபர் வழங்குதல், ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவி ஆகிய திட்டத்தின்கீழ் 44 பேர்களுக்கு ரூ.70,000 மதிப்பீட்டில் உதவிகள் வழங்கப்பட்டன.

ஊரக வளர்ச்சித் துறையின்கீழ் கறவை மாடுகள் வாங்க 203 பேர்களுக்கு ரூ.8.06 இலட்சம் கடனுதவியும், ஆடுகள் வாங்க 31 பேர்களுக்கு ரூ.1.35 இலட்சம் கடனுதவியும், வண்டிமாடு வாங்க 40 பேர்களுக்கு ரூ.3.11 இலட்சம் கடனுதவியும், இத்துறையின் இதர திட்டத்தின்கீழ் பெட்டிக்கடை வைக்க, நெசவுத் தொழில் செய்ய, மீன்வலை வாங்க, சைக்கிள்கடை வைக்க மற்றும் இதர சலுகைகளின் கீழ் 269 பேர்களுக்கு ரூ.16.53 இலட்சம் மதிப்பீட்டில் நிதி உதவிகள் வழங்கப்பட்டன.

நலிந்தோர் உதவித்திட்டத்தின் கீழ் 10 பெண்களுக்கும், இலவச வீட்டுமனைப் பட்டா 111 பேர்களுக்கும், இயற்கை இன்னல் நிவாரண உதவி 3 பேர்களுக்கும் ஆக மொத்தம் 124 பேர்களுக்கு வருவாய்த் துறையின்கீழ் ரூ.1.66 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டன.

முன்னாள் படைவீரர் நலத்துறையின்கீழ் திருமண மானியமாக ஒரு பெண்ணுக்கு ரூ.2,000-மும், 3 பெண்களுக்கு வெட்கிரைண்டர் வாங்க ரூ.14,000 மானியமாகவும் வழங்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் தையல் இயந்திரம் ஒருவருக்கும், இஸ்திரிப் பெட்டிகள் 13 பேர்களுக்கும், வீட்டுமனைப்பட்டா 10 பேர்களுக்கும், பிற்பட்டோர் நலத் துறையின்கீழ் 11 பேர்களுக்கு இஸ்திரிப் பெட்டிகளும், சவரக் கருவி இருவருக்கும் ரூ.30,000



மதிப்பீட்டில் வழங்கப்பட்டன.

வேளாண்துறையின்கீழ் தேசிய பயிறு பெருக்கத் திட்டம், ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டங்களுக்கென 32 பேர்களுக்கு ரூ.1.33 இலட்சம் நிதியுதவியும், மீன்வளத் துறையின்கீழ் 70 பேர்களுக்கு இலவசமாகக் குடியிருப்புக் கட்டிக்கொள்ள ரூ.18.20 இலட்சம் மானியமும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் வாயிலாகச் சிறுதொழில் செய்ய ஒருவருக்கு ரூ.3.60 இலட்சம் கடனுதவியும், பொதுத்திட்டத்தின்கீழ் 6 பேர்களுக்கு ரூ.19.36 இலட்சம் கடனுதவியும், கதர்மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின்மூலம் 11 பேர்களுக்கு ரூ.1.02 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவியும் வழங்கப்பட்டது.

தாட்கோ நிறுவனம் மூலம் உழவு மாடு வாங்க 14 பேர்களுக்கும், வண்டியும் மாடும் வாங்க 17 பேர்களுக்கும், மினிவேன் வாங்க ஒருவருக்கும், டிராக்டர் மற்றும் டிரெயிலர் வாங்க இருவருக்கும், இதர சலுகைகளின்கீழ் 18 பேர்களுக்கும், ரூ.12.57 இலட்சம் மதிப்பீட்டில் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

உள்ளாட்சித் துறையின் கீழ் சைக்கிள்கடை, மளிகைக்கடை வைக்கவும், இதர இனங்களின்கீழும் 26 பேர்களுக்கு ரூ.2.20 இலட்சம் நிதியுதவியும், மாவட்டத் தொழில் மையம் மூலமாக 31 பேர்களுக்குத் தொழில் முதலீட்டுக் கடனாக ரூ.5.11 இலட்சமும், பாரத ஸ்டேட் வங்கியின் மூலம் 33 பேர்களுக்குத் தொழில் தொடங்க ரூ.99.53 இலட்சம் கடனுதவியும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் குறுகிய கால, மத்தியக் காலப் பருவக் கடனாக 1,566 பேர்களுக்கு ரூ.115.90 இலட்சம் கடனுதவியும், 5 நபர்களுக்கு வேளாண் சாராக் கடனாக ரூ.32.83 இலட்சமும் வழங்கப்பட்டன.

சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் சாதனை புரிந்தமைக்காக அரசின் ஊக்கத்தொகை ரூ.10 இலட்சமும், பேரூராட்சித் திட்டப் பணிகளுக்காக ரூ.18.70 இலட்சமும் வழங்கப்பட்டன.

இதுதவிர பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 19 பேர்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்கென ரூ.3,06,000 (ரூபாய் மூன்று இலட்சத்து ஆறாயிரம் மட்டும்) நிதி உதவியினையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஹேமந்த் குமார் சின்ஹா, இ.ஆ.ப., அவர்கள் உடனிருந்தார்.

## 'தமிழரசு' அடுத்த இதழில்...

காது - மூக்கு - தொண்டை
மருத்துவ நிபுணர்
டாக்டர்.கே.கே.ராமலிங்கம்



**பதில்கள் இடம் பெறும்.**



# உழவர் வாழ்வு உயர...

**திரு. கு.ப. கிருஷ்ணன்**
**(மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்)**

தமிழக அரசின் வேளாண்துறை மிகச் சீரிய முறையில் பல்வேறு வேளாண் உற்பத்தித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

'வரப்பே தலகாணி
வைக்கோலே பஞ்சுமெத்தை
வேர்வையே பெருங்குளியல்
வெற்றுடம்பே பட்டாடை'யாகக்

கொண்டு பாடுபடும் சிறு மற்றும் குறு விவசாயிகள்- உளம் மகிழ, பல்வேறு திட்டங்களை டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்ற நாள் முதல் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

இந்த ஆண்டு நல்ல மழை பெய்து, பல்லாண்டுகளுக்குப் பிறகு, குறித்த காலத்தே மேட்டூர் அணை திறக்கப்பட்டு, குறுவைச் சாகுபடி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு சென்ற ஆண்டைவிட ஒரு இலட்சம் எக்டேர் கூடுதலாகக் குறுவைச் சாகுபடி செய்யப்பட்டது. உற்பத்தித் திறனும் உயர்ந்துள்ளது. தமிழக அரசு வரலாற்றில் இதுவரை எட்டாத உயர்ந்த அளவு உணவு உற்பத்தியினை இவ்வாண்டு பெறுவோம் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், பருத்தி, கரும்பு உற்பத்தியிலும் குறிப்பிடத்தக்க சாதனையை நாம் இவ்வாண்டு அடைய உள்ளோம்.

14 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தித் திட்டம் இந்த ஆண்டு முதல் 20 மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு, 9.5 கோடி ரூபாய் செலவில் செயல்பட்டு வருகிறது.

'புஞ்சை விளைந்தால் பஞ்சம் தீரும்'- என்ற பழமொழிப்படி, சோளம், கேழ்வரகு பயிர் சாகுபடிக்கென ஒரு சிறப்புத் திட்டம் 1.25 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உழவர்கள் நெற்பயிரையும், பணப் பயிரெனக் கருதி, வருவாயைப் பெருக்கிட ஜே.ஜே.92 என்ற புதிய வாசனை ரக நெல்லை, 'பொங்கல் பரிசாக' பொங்கல் நன்னாளில் இருந்து விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளோம். இதனை உழவர்கள் பயிரிட்டு அதிக வருவாயைப் பெருக்க வேண்டுகிறேன். விந்திய மலைக்குத் தென் பகுதியில் பயிரிடச் சிறந்த , 105 நாட்கள் முதல் 110 நாட்களுக்குள் விளையக்கூடிய வாசனை ரகம் இந்த ஜே.ஜே.92 என்பது குறிப்பிடத்தக்கது.

இரசாயன உரத்தின் விலை உயர்வால் வேதனையுறும் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் உரங்கள் கிடைப்பதற்கு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாக 35 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு வருகிறது. இதுவரை எந்த அரசும் செயல்படுத்தாத வகையில் கடந்த ஆண்டில் 75 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 எக்டேர் தரிசு நிலங்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டன. மேலும் 10,000 எக்டேர் தரிசு நிலத்தைச் சாகுபடிக்குக் கொண்டுவர 150 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



நீர்ப்பிடிப்புப் பகுதிகளை மேம்பாடு செய்யத் தேசீய மானாவாரி நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு சீரிய திட்டத்தினை வகுத்து இத்திட்டம் 35 கோடி ரூபாய் செலவில் 14 மாவட்டங்களில் 84 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறு-குறு விவசாயிகளும் விசை உழவைக்கொண்டு வேளாண் தொழிலில் தீவிரமாக ஈடுபடும் வகையில், 2,000 பவர் டில்லர்கள் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பவர் டில்லருக்கும் ரூபாய் 12,000 மானியம் வழங்கத் தமிழ்நாடு அரசு 2.5 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளது.

பெண்ணினத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆற்றிவரும் பணி மகத்தானது. வேளாண் தொழிலிலும் பெண்கள் மேம்பாடு அடைய வேண்டும் என்ற தொலை நோக்கில், வேளாண் பெண்கள் மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்தி வருகிறார்கள். விதை விதைப்பது முதல் விளைந்த பொருளைச் சந்தையில் விற்பனை செய்வது வரை மகளிர் ஆற்றும் பணி சிறந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு 'டென்மார்க்' அரசு உதவியுடன், 4.25 கோடி ரூபாய் செலவில், தமிழகத்தில் 6 மாவட்டங்களில் உழவர் பயிற்சி நிலையங்கள் மூலமாக வேளாண் தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சிகள் பெண்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

## நீர்நிலைகள்!

தருமபுரி மாவட்டம் 'மழை மறைவு' மாவட்டம்தான்; ஆனால் - இம்மாவட்டத்தில் காவிரி, தென் பெண்ணை, சனத்குமார நதி, மார்க்கண்டேய நதி, பாம்பாறு, வாணியாறு, தொப்பையாறு, நாகாவதி ஆறு, தும்பலஹள்ளி ஆறு, கெலவரப்பள்ளி ஆறு, சிங்கிரிப் பள்ளி ஆறு போன்ற ஆறுகளும் - அவ்வாறுகளில் கட்டப்பட்டுள்ள முத்தூர் அணை, பஞ்சப்பள்ளி அணை, கெசர்குளி அணை, தும்பலஹள்ளி அணை, நாகாவதி அணை, தொப்பையாறு அணை, பாம்பாறு அணை, வாணியாறு அணை, சிங்கிரிப்பள்ளி அணை, கெலவரப் பள்ளி அணை, சூளகிரி அணை, ஈச்சம்பாடி அணை போன்ற நீர்த் தேக்கங்களும் உள்ளன;

1858-ஆம் ஆண்டு கட்டப்பட்ட பாரூர் ஏரி, பெனுகொண்டபுரம் ஏரி, ஆலாபுரம் ஏரி, சோகத்தூர் ஏரி, ராமக்கால் ஏரி, அதியமானால் உருவாக்கப்பட்ட 'அதியமான் கோட்டை ஏரி, அன்னசாகரம் ஏரி, கடகத்தூர் ஏரி, தளி ஏரி, தேன் கனிக் கோட்டை ஏரி, கெலமங்கலம் ஜி.பி. ஏரி, ஒசூரின் நான்கு திசைகளிலும் அமைந்துள்ள 'நான்கு ஏரிகள், கடத்தூர் ஏரி மற்றும் கம்பைநல்லூர் ஏரி ஆகிய நீர் நிலைகளும் இம்மாவட்டத்தின் வேளாண்மைக்கு உறுதுணையாக அமைந்துள்ளன.

அனைத்து மாவட்டங்களிலும் இத் திட்டம் செயல்பட 24 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்பட உள்ளது.

இதுபோன்ற இன்னும் பல திட்டங்களை வேளாண் பெருமக்களுக்கென்றே அரசு செயல்படுத்தி வருகிறது. எனவே, இவற்றை உழவர்கள் நன்கு பயன்படுத்தி, வாழ்வில் உயர்வு அடைய வேண்டுகின்றேன்.

'கரும்போடு நெல்பருத்தி
மஞ்சள் நல்ல
கனிவாழை பழவகைகள்
தானி யங்கள்
தரும்உழவர் புன்சிரிப்பு
நிலைத்து நிற்கத்
தமிழ்போல என்றென்றும்
சுவைத்து வாழ
வருமானம் மிகப்பெருகி
இன்பம் சூழ
வகை செய்வோம் வரலாறு
சமைப்போம் கட்டிக்
கரும்பாக இனிக்கட்டும்
உழவர் வாழ்க்கை
கனிவோடு வாழ்த்துகிறேன்,
வாழ்க நீங்கள்!'

## கல்வித் தரம் உயர...

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு அறிவுரை வழங்கியதன் பயனாக, கடந்த கல்வி ஆண்டில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரின் தேர்வு விழுக்காடு அதிகரித்து உள்ளது. இதனை மேலும் உயர்த்தவேண்டும் என்றால் அப்பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களும், பாட ஆசிரியர்களும் ஊக்கத்துடன் மாணவர்களுக்குப் பாடங்களை பயிற்றுவித்தால்தான், அந்த மாணவ மாணவியர்கள் சிறந்த முறையில் பயிற்சி பெறுவார்கள்.

எனவே, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆதிதிராவிடர் நலப்பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும் ஊக்கப் பரிசுகளை வரும் கல்வி ஆண்டில் இருந்து வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். அதன்படி உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல் நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அப் பள்ளியின் வெற்றி விழுக்காடு 75 சதவிகிதம் இருந்தால் ஊக்கத்தொகை 1,500 ரூபாயும், 60 சதவிகிதம் முதல் 74 சதவிகிதம் வரை இருந்தால் 1000 ரூபாயும் ஆண்டு ஒன்றுக்குப் பெறுவார்கள். அதேபோல் சம்பந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் 100 சதவிகிதம் வெற்றி விழுக்காடு காண்பித்தால் 750 ரூபாய் ஊக்கத் தொகையாக ஆண்டு ஒன்றுக்குப் பெறுவார்கள்.

இந்த ஊக்கத் தொகை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மாணவ மாணவியர்களைப் பயிற்றுவிப்பதில் தலைமை ஆசிரியர்களுக்கும், பாட ஆசிரியர்களுக்கும் ஒரு பெரும் ஊக்கத்தைக் கொடுப்பதாக அமையும்.



எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்!

# அம்மன் கிரனைட்ஸ்

***100 சதவிகித ஏற்றுமதி நிறுவனம்***

***அரூர் - 636903 - தமிழ்நாடு***

அனைத்து ரக நினைவுச் சின்னங்களையும், ஏற்றுமதி செய்யும் தலைசிறந்த நிறுவனம் அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வாடிக்கையாளர்களிடமிருந்து சிறப்பான நினைவுச் சின்னங்களுக்கென ஆர்டர்களைப் பெறுவதில் தலைசிறந்து விளங்குகிறது.

ஒவ்வொரு ஆண்டிலும் இந்த நினைவுச் சின்னங்கள் ஏற்றுமதியில் 100 சதவிகிதம் அதிகரித்துள்ளோம்.

**தொழிற்சாலை:**

கேபிள்: CHENGRANIT
**அரூர் தொலைபேசி: 2169, 2119**
**ஃபேக்ஸ்: (04346), 2033**
**எம்.ஜி. காலனி–அரூர் 636903**
**தமிழ்நாடு. இந்தியா.**

**சென்னை அலுவலகம்:**

**ஃபேக்ஸ்: 91-44-869155**
**தொலைபேசி: 868056**
**129 அபிபுல்லா ரோடு,**
**தி.நகர்**
**சென்னை - 600 017.**

நல்வாழ்த்துக்கள்





## திம்மி செட்டி

செயலாளர்,

கிருஷ்ணகிரி கிரானைட் சங்கம்

தர்மபுரி மாவட்டம்

**போன்: 2399**



## இந்திய ஒருமைப்பாட்டையும் இன ஒற்றுமையையும் வலியுறுத்தி

## தென்னார்க்காடு மாவட்டம் முழுவதும்

# மனிதச் சங்கிலி

**அ**மைதிப் பூங்காவான தமிழகத்தில் பூத்த அழகான மலர்க்கொத்து தென்னரார்க்காடு மாவட்டம். இம் மாவட்டத்தில் அதிக அளவில் வீமும் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களும் மற்ற இனத் தவரும் சமூக, பொருளாதார வாழ்வில், மலரும் மணமும் போல் இணைந்து வாழும் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டு உள்ளார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர், திரு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையின் கீழ், தென்னார்க்காடு மாவட்ட நிர்வாகத்தினரும், பொதுமக்களும் மற்றும் பல்வேறு சமுதாய முன்னேற்றச் சங்கங்களும், சமூக சேவை நிறுவனங்களும் இணைந்து நாட்டிற்கும் வீட்டிற்கும் நன்மைபயக்கும் ஓர் ஒருமைப்பாட்டுச் சாதனையை, தைப்பூசத் தினத்தன்று நிகழ்த்திக் காட்டினர்.

சமயச் சார்பற்ற பாரதத்தை இம்மண்ணில் நிலைநாட்டுவதும், நாம் வாழ்வது பல்வேறு இனத்தினர் வாழ்ந்தாலும் என்றும் அது ஒன்றுபட்ட ஒரே இந்தியா என்பதை உறுதிப்படுத்துவதும்தான் இன்றைய காலகட்டத்தில் நம்முள் உள்ள தலையாய கடமை என்பதை இந்த மனிதச் சங்கிலி நிகழ்ச்சி எடுத்துக் காட்டியது.

அண்ணல் காந்தியடிகள், மனித குலமாணிக்கம் பண்டித நேரு, கோபாலகிருஷ்ண கோகலே, பால கங்காதர திலகர், மகாகவி பாரதியார், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி., தில்லையாடி வள்ளியம்மை, ஆன்மிக நெறி வகுத்துக் கொடுத்த அருட்பிரகாச வள்ளலார் போன்றவர்கள் பண்படுத்திய நிலம் நமது இந்தியத் திருநாடு. இதனைப் பாழ்படுத்திட எந்தச் சக்திகள் முயன்றாலும் அதனை முறியடிப்பது நமது ஒவ்வொருவரின் கடமையாகும்.

இதை வலியுறுத்தும் வகையில், தென்னார்க்காடு மாவட்ட நிர்வாகம் 6.2.1993 அன்று காலை 11.00 மணி முதல் 11.20 வரை தென்னார்க்காடு முழுவதும் 800 கி.மீ. தூரத்திற்குச் சிதம்பரம், விருத்தாசலம், கடலூர், திருக்கோயிலூர், திண்டிவனம் கோட்டங்களில் முக்கியச் சாலைகளில் மனிதச் சங்கிலித் தொடர் நிகழ்ச்சியை நிகழ்த்திக் காட்டியது.

**கடலூர்**

கடலூரில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு எம். ஆனந்தன் அவர்கள் கலந்து கொண்டு இந்தியத் திருநாட்டின் ஒற்றுமையைக் காப்போம், இமயமும், குமரியும் எங்கள் எல்லை, எம்மதமும் சம்மதம், மனிதநேயம் காப்போம் என உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., கடலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு பி.ஆர்.எஸ். வெங்கடேசன், கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு பி.பி. கலியபெருமாள், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு எஸ்.ஆர். ஜாங்கிட்,

இ.கா.ப., கூடுதல் ஆட்சியர் (மேம்பாடு) திரு பெ. இறையன்பு, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு தி.ஆ. சுப்பிரமணியம், கோட்ட வருவாய் அலுவலர், திரு ஜெயராமன், நேரு யுவக் கேந்திரா ஒருங்கிணைப்பாளர் திரு பால சுப்பிரமணியம் ஆகியோர் உறுதி மொழி படித்தனர்.

இந்தியன் வங்கி மண்டல மேலாளர் திரு சீனிவாசன், பள்ளிக் கூட மாணவ மாணவிகள், என்.எஸ்.எஸ்., என்.சி.சி. மாணவர்கள், வர்த்தகச் சங்கத்தினர், அரிமா சங்க மண்டல மேலாளர் திரு என்.எஸ். ரங்கநாதன் மற்றும் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர்.

**விருத்தாசலம்**

மனிதச் சங்கிலி நிகழ்ச்சியையொட்டி சங்கொலி ஒலிக்கப்பட்டதும், வரிசையில் கைகோத்து நின்றவர்கள் தேசிய ஒருமைப்பாடு மத நல்லிணக்க உறுதிமொழி எடுத்தனர். விருத்தாசலம் பாலக்கரையில் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ப. வள்ளல் பெருமாள், சட்டமன்ற உறுப்பினர் திரு அரங்கநாதன், கோட்ட வருவாய் அலுவலர் திரு கிருஷ்ணமூர்த்தி, கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ரங்கநாதன், அரசு ஊழியர்கள் அலுவலர் சங்கத் தலைவர்கள் மற்றும் திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

திண்டிவனம் :

திண்டிவனம்-சென்னை நெடுஞ்சாலையில் நடைபெற்ற இந்த மனிதச் சங்கிலியில் பொதுமக்கள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், அரிமா சங்க அமைப்புகள் கலந்து கொண்டன. திண்டிவனம் உதவி மாவட்ட ஆட்சியர் திரு ஜவகர், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர் திரு பன்னீர்செல்வம், மாவட்டக் கல்வி அலுவலர் செல்வி பாத்திமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**விழுப்புரம்**

விழுப்புரம் பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் *161* கி.மீ. தூரத்திற்குச் சுமார் **65** ஆயிரம் பேர்கள் கலந்து கொண்டனர். நான்குமுனை தேசிய நெடுஞ்சாலையில் நடந்த மனிதச் சங்கிலியில் வள்ளலார் மாவட்டத் தனி அலுவலர் திரு ரமேஷ்குமார் கன்னா, இ.ஆ.ப., உதவிக் காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு இராமச்சந்திரன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

எம்.ஜி. ரோடு சந்திப்பில் நடந்த மனிதச் சங்கிலியில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் திரு தே. ஜனார்த்தனம் மற்றும் அனைத்துப் பள்ளியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

**நெல்லிக்குப்பம்**

அண்ணாசாலையில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு தாமோதரன், அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை பத்மாவதி, கிராம நிர்வாக அலுவலர்கள், வாசகர் வட்டம், நுகர்வோர் பேரவை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பண்ருட்டி தாசில்தார் லட்சுமி நாராயணன், வருவாய்த்துறை அலுவலர் சங்கச் செயலாளர் பன்னீர் செல்வம், பண்ருட்டி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், பெண்கள் பள்ளி மாணவியர்கள், பாலவிகார் மெட்ரிகுலேஷன், காந்தி ஆங்கிலப் பள்ளி, அறிஞர் அண்ணா ஆங்கிலப் பள்ளி மற்றும் அரசுத் தொடக்கப்பள்ளி மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.

கண்டமங்கலம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு வி. சுப்பிரமணியம், மேல்மலையனூர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜானகிராமன் ஆகியோர் அவரவர் தொகுதியில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் சாலமேட்டில் உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தலைமையகம் முன்பு, மேலாண்மை இயக்குநர் பால சண்முகம், பொது மேலாளர் மற்றும் நிதிக் கட்டுப்பாடு அலுவலர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

தென்னார்க்காடு மாவட்ட நிர்வாகம் மிகக் குறுகிய கால அவகாசத்தில் ஏற்பாடு செய்த இம்மனிதச் சங்கிலி நிகழ்ச்சி, மாவட்டம் முழுமையிலும் தேசிய ஒருமைப்பாட்டுணர்வைத் தோற்றுவிப்பதில் மகத்தான வெற்றி பெற்றுள்ளதாகப் பல பத்திரிகைகள் பாராட்டியுள்ளன.

**– அ. சந்திரசேகரன்**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**தென்னார்க்காடு மாவட்டம்**





புதுக்கோட்டை மாவட்டம்

# நலத்திட்டப் பணிகள்

**பு**துக்கோட்டை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1992-93-ஆம் நிதி ஆண்டில் ரூ.150.70 இலட்சம் செலவில் 4,623 பயனாளிகளுக்கு உதவி வழங்கத் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் சொத்துக்களை நன்கு பராமரிப்பதிலும், வங்கிக் குரிய கடன்களைத் திரும்பச் செலுத்துவதிலும், தனி நபர் பயனாளிகளைக் காட்டிலும் குழுவாக அமைத்துச் செயல்படும் பயனாளிகளின் செயல் திறன் சிறப்பாக அமைந்துள்ளதால், நடப்பாண்டில் குழு செயல்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

1992 செப்டம்பர் 21-ஆம் நாள் அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் 600 பயனாளிகளுக்கு ரூ.40 இலட்சம் மதிப்புள்ள பொருள்கள், வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்**

1992-93-ஆம் ஆண்டில் தார்ச் சாலைகள் அமைக்கவும், பள்ளிக் கட்டடங்கள், மதிய உணவுக் கூடங்கள் கட்டுவதற்கும், சிறு பாசனக் கண்மாய்கள் மேம்படுத்தவும், ஊராட்சிகளுக்குத் தெரு விளக்குகள் அமைக்கவும், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யவும் ரூ.669.99 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதிக்கான திட்டம்**

1992-93-ஆம் ஆண்டில் ரூ.60 இலட்சம் செலவில் 918 எக்டேர் பரப்பளவில் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரை ரூ.25.71 இலட்சம் செலவு செய்யப்பட்டு 596 எக்டேர் நிலம் பயனடைந்துள்ளது.

கரிமவாயுத் திட்டத்தின் கீழ் 300 கலன்கள் அமைக்கப்படவுள்ளது. 3,000 புகையில்லா அடுப்புகள் அமைக்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டதில் இதுவரை 750 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**சமூகக் காடுகள்**

1992-93-ஆம் ஆண்டில் ரூ.16.03 இலட்சம் செலவில் 10 இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டு, அவற்றை 468 எக்டேர் பரப்பில் நடவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 309 எக்டேர் பரப்பில் நடவு செய்யப்பட்டுள்ளது.

**கிராமக் குடிநீர்த் திட்டம்**

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கிராமப் பகுதிகளில் நடப்பு நிதியாண்டில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ரூ.200 இலட்சம் செலவில் 157 குடியிருப்புகளுக்காக 18 கைப்பம்பு மற்றும் 139 விசையிறைப்பான்கள் அமைத்து குடிநீர் வழங்கவும், நீராதாரம் பொய்த்த 32 பழைய திட்டங்களுக்குப் புதிய ஆழ் துளைக் கிணறுகள் அமைக்கவும், பழுதடைந்துள்ள 95 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைச் செப்பனிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 30,000 பேர் பயனடைந்துள்ளனர்.

இந்த மாவட்டத்தில் புதிதாக ஆழ்குழாய்க் கிணறுகள் 200 அமைப்பதற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இதில் முதல் கட்டமாக ரூ.71.93 இலட்சம் செலவில் 150 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு சுமார் 29,800 பேர் பயனடைந்து வருகிறார்கள்.

**பேரூராட்சிப் பணிகள்**

ஆலங்குடிப் பேரூராட்சிக்கென ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் ரூ.51.53 இலட்சத்திற்கான திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பொன்னமராவதி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.45.35 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அரிமளம் பேரூராட்சிக்கு ரூ.45.35 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு சுமார் 7,200 பேர் பயன் பெறுகிறார்கள். கறம்பக்குடிப் பேரூராட்சிக்கு ரூ.45.95 இலட்சம் செலவில் திட்டம் முடிக்கப்பட்டு சுமார் 11,000 பேர் பயன் அடைந்துள்ளனர்.

நகரங்கள் நலமடைய வேண்டுமானால், கிராமங்கள் வளமடைய வேண்டுமென்றார் அண்ணல் காந்தியடிகள். அந்த வகையில் கிராமப்புற மக்களின் நிதி ஆதாரத்தைப் பெருக்கிடும் வகையில்-ஏழை, எளிய மக்கள், குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் பயனடைய, இதுபோல் பல்வேறு நலத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகிறது.

உல. இரவீந்திரன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)
புதுக்கோட்டை

## அறிவொளி இயக்கம்



# கல்லாத பேர்களே இல்லாத நிலை...

"கல்லாத பேரையெல்லாம் கல்வி பயிலச் செய்து காண்பதிலே தான் இன்பம்'' - என்று பாடினார் ஒரு கவிஞர். அந்த வரிவடிவத் திற்குச் செயல்வடிவம் கொடுத்திட, கல்லாத பேர்களே இல்லாத நிலை உருவாக்கிட அறிவொளி இயக் கத்தை தீவிர முனைப்புடன் செயல் படுத்திட களத்தில் இறங்கி விட்டது நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம்.

நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டம், 18.10.1991 அன்று புதிய மாவட்டமென, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் பொலிவுடன் தொடங்கி வைக்கப் பட்டது. மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 24 இலட்சம் ஆகும். இதில் கற்றவர் தொகை 14 இலட்சம், கல்லாதோர் எண்ணிக்கை 10 இலட்சம் ஆகும்.

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், விவசாயமே முழுமுதற் தொழிலாக உள்ள மாவட்டம். அதனால் ஏழை விவசாயத் தொழி லாளர்களைப் பெருமளவாக உள்ள டக்கிய மாவட்டம். எழுதப்படிக்கத் தெரியாதவர் எண்ணிக்கையும் பேரளவாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சமுதாயத்தின் அடித்தட்டிலே இருக்கும் இத்தகைய மக்கள், அரசின் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் வளர்ச் சித் திட்டங்களின் பயனைப் பெற வேண்டும் என்றால், அவர்களைக் கற்றவர்கள் ஆக்க வேண்டியது அவசியம். இக்கொள்கையை நிறை வேற்றும் தீவிரத் திட்டமே அறி வொளி இயக்கம். கல்லாதோரில் 9 வயது முதல் 45 வயதுடையோருக்கு எழுதவும், படிக்கவும், கணக்கறிவு பெறவும் செய்வது இவ்வியக்கத்தின் நோக்கமாகும்.

மாவட்ட அளவில் இத்திட்டத் தினைச் செயல்படுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலை மையில் மாவட்ட அலுவலர்கள் கொண்ட குழுவும், வட்டார அள வில் வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டாட்சியர், உதவிக் கல்வி அலுவலர் கொண்ட குழுவும், ஊராட்சி அளவில் அங்கு பணி புரியும் அனைத்துத்துறை அலுவலர் களையும் கொண்ட குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக் களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த சேவை மனப்பான்மையும், தொண்டுள்ளமும் கொண்டவர் களும், கல்விப்பணி சிறக்க ஆதர வளிக்கும் பெரியோர்களும் சேர்க் கப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டத்திலுள்ள கல்வி கற்பிக்கப் பட வேண்டிய 9 வயது முதல் 45 வயது வரையிலானவர்களின் எண்ணிக்கை துல்லியமாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆண்கள் 1.29 இலட்சம், பெண்கள் 2.35 இலட்சம் ஆக மொத்தம் 3.64 இலட்சம் பேர்களுக்குக் கல்வி கற்பிக்கப்படுதல் வேண்டும். இவர்களுக்கு எழுதவும், படிக்கவும், கையொப்பமிடவும் கற்றுத்தர 10 நபர்களுக்கு ஒரு தன்னார்வத் தொண்டர் என்ற வகையில் 36,400 பேர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கல்லாதோர் வசித்துவரும் குடியிருப்புகளுக்கு அருகிலேயே இருந்து கல்வி கற்றுத் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தீவிர முனைப்புடன், நாகப்பட்டினம்-காயிதேமில்லத் மாவட்டத்தில் செயல்படத் தொடங்கியுள்ள அறிவொளி இயக்கத்தின் மாவட்ட மாநாடு 27.12.1992 அன்று நாகப்பட்டினம் காவல்துறை அணிவகுப்பு மைதானத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டுக்கு வருகை தந்தோரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் திரு. இரா. அழகிரிராஜூ அவர்கள் வரவேற்றார்.

மாவட்ட ஆட்சித் தலைவரும் மாவட்ட அறிவொளி இயக்கத் தலைவருமான திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்கள் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவொளிக் கொடியை ஏற்றிவைத்து, பின் அறிவொளிச் சுடர் ஏற்றி மாநாட்டைத் தொடக்கி வைத்தார். பின்னர் அறிவொளி வீடியோ ஒளிப்பேழை, ஒலி நாடா மற்றும் 'அறிவொளித் தீபம்' நூல் ஆகியவற்றை வெளியிட்டு விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து வீடியோ ஒளிப்பேழையை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. ஸ்கந்தன், இ.ஆ.ப., அவர்களும் ஒலி நாடாவைத் திட்ட அலுவலர் திரு. இரா. அழகிரிராஜூ அவர்களும், 'அறிவொளி தீபம்' புத்தகங்களை முதன்மைக் கல்வி அலுவலர் திரு. ஜி. இராதாகிருஷ்ணன் அவர்களும் பெற்றுக்கொண்டார்கள்.

அறிவொளி இயக்க எழுத்தறிவு உறுதி மொழியை, அரசுத் திட்டத் துறைக் கூடுதல் செயலாளர் திருமதி குட்சியா காந்தி, இ.ஆ.ப., அவர்கள் அனைவரையும் ஏற்க வைத்து உரையாற்றினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அனுராதா கதிராஜீவன், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். ஆசைமணி, திரு. ஆர். கோடிமாரி, திரு. எம். பூராசாமி, திரு. வே. தம்புசாமி, திரு. கோ. பழனிச்சாமி, வயதுவந்தோர் கல்வித் துறை இயக்குநர் திரு. கண்ணன், பள்ளிச் சாராக் கல்வி கருவூல இயக்குநர் எம்.ஜெ.ஏ. ரஞ்சன்தாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

முன்னதாக 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்னார்வத் தொண்டர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான அறிவொளி பேரணி அன்று மாலை தொடங்கியது. புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி அனுராதா கதிராஜீவன், இ.ஆ.ப., அவர்கள் கொடி அசைத்து ஊர்வலத்தைத் தொடங்கிவைத்தார். ஊர்வலம் தேசிய மேல்நிலைப் பள்ளியிலிருந்து தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக மாநாடு நடைபெற்ற காவல்துறை அணிவகுப்பு மைதானத்தை அடைந்தது.

மாநாட்டில் அறிவொளி இயக்கத்தினரால் சிறப்பான கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பெற்றன.

அறிவொளி இயக்கத்தின் மூலம் கல்லாதவர்களுக்குக் கல்வி கற்றுத் தரும் பணி 1993 ஜனவரித் திங்களில் தொடங்கி செப்டம்பர் மாதத்தில் முழுமை அடையும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

**— வை. புண்ணியமூர்த்தி**

-செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்



# VGP

# Easy Purchase Scheme



The VGP Easy Purchase Scheme has been divided into different groups for your convenience. Choose a group that suits you best. Payment is by way of regular, monthly instalments. After the completion of all your 12 monthly instalments, you can take home the product you need + Free gift.

**Scheme Ending Free Gift**

| Rs.100 | Rs.200 | Rs.300 | Rs.500 | Rs.1000 |
|---|---|---|---|---|
| p.M Group Rs.100 worth Free Gift | p.M Group Rs.200 worth Free Gift | p.M Group Rs.300 worth Free Gift | p.M Group Rs.500 worth Free Gift | p.M Group Rs.1000 worth Free Gift |

**VGP V.G.PANNEERDAS & CO.**

3, K.H.(Double Road, Bangalore-27. PH:236499, 225828
Branch: VGP "Victory Plaza", 30th Cross, 7th Main, 4th Block Jayanagar Bangalore-11. Ph:646301

Also at Madras: Saidapet Ph:45333. Mount Road Ph:830314. T.Nagar Ph:440246. Rattan Bazaar Ph:564949. Red Hills Ph:67398 and all Mofussil Branches. Branches: Chingleput Ph:237. Kancheepuram Ph:2934. Villipuram Ph:2519. Arkonam Ph:232. Thiruvannamalai Ph:2664. Vellore Ph:22429. Trichy Ph:41956. Madurai Ph:3199. Coimbatore. Hyderabad Ph:232219. Bombay Ph:4091092. Delhi Ph:582146

# அரசு அலுவலர்களுக்குச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் பயண விடுப்புச் சலுகைகள்



அரசு அலுவலர்களுக்குச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் பயண விடுப்புச் சலுகைகள் அனைத்து அரசு அலுவலர்களுக்கும் இருவழிப் பயணம் மற்றும் ஒரு வழிப் பயணம் (Leave Travel Concession) மேற்கொண்டு சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப் பார்க்க அரசு சலுகை அளித்திருப்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

**சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் மூலம் சலுகைகள்**

இதே சலுகையைச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சொகுசுப் பேருந்து மூலம் பல சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப் பார்க்க, (அரசு ஆணை (நிலை) எண். 75898/அலவன்ஸ்/92.1, நாள் 6.11.92 மூலம் அறிவித்துள்ள விதிமுறையின்படி) அரசு அலுவலர்கள் இருவழி பயணச் சலுகையை அனுபவிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்புதிய திட்டம், முதன் முதலில் சென்னையில் மட்டும் செயலாக்கப்பட்டிருந்தாலும், நாளடைவில், மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களிலும் இத்திட்டம் விரிவு படுத்தப்படவுள்ளது.

**பயன்பெற விரும்புவோர் கவனிக்க**

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்புவோர், ஒரு வழிப் பயணச்சலுகையை அனுபவிக்க இயலாது. இருவழிப் பயணச் சலுகையை அனுபவிக்க இயலும். இதற்காக அரசு ஊழியர் செலுத்தும் கட்டணத்தில் தங்கும் வசதிக்கான செலவும் அடங்கும்.

அனைத்து அரசு ஊழியர்களும் (ரயிலில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு செல்லும் அனைத்து அரசு ஊழியர்களுக்கு) இச்சலுகையை அனுபவிக்க இயலும்.

மேலும் ஏற்கெனவே அரசு ஆணையில் அறிவித்தபடி, 80 சதவிகிதம் முன்பணம் பெற்றுக் கொள்ளலாம். இம் முன் பணத்தைப் பெறுவதற்கு முன், சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவுக்கு முன்பதிவு ரூ.25 வீதம் கட்டணம் செலுத்திப் பதிவு செய்ய வேண்டும்.

80 சதவிகிதம் போக, மீதமுள்ள 20 சதவிகித பணத்தைச் சுற்றுலா சென்று வந்து, உரிய பட்டியலை வழங்கி, பணத்தை அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இதனால் என்ன நன்மை?**

இருவழிப் பயணச் சலுகையைப் பயன்படுத்தி ரயிலில் பயணம் செய்தால், குறிப்பிட்ட ஓர் இடத்தை மட்டும்தான் பார்க்க முடியும். முக்கிய சுற்றுலா மையத்தைச் சுற்றியுள்ள இடங்களைப் பார்க்க வேண்டுமாயின், சொந்தப் பணத்தைச் செலவிட்டுப் பார்ப்பதோடு அல்லாமல், தலைமையிடத்திற்குத் திரும்ப எந்த இடத்திலிருந்து பயணச் சீட்டு வாங்கினோமோ அந்த இடத்திற்கே வந்து ரயில் பயணம் தொடங்க வேண்டும்.

சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவில் கலந்து கொண்டால் பல இடங்களைப் பார்க்க முடியும். குறிப்பாக சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவில் கலந்து கொண்டால், தஞ்சாவூர், தாராசுரம், இராமேஸ்வரம், மண்டபம், கன்னியாகுமரி, மதுரை, திருச்சி என்று பல சுற்றுலா மையங்களையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த எழில்மிகு தலங்களையும் பார்க்க இயலும்.

**சுற்றுலா மாளிகையில் சொகுசான வசதி**

சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாவில் இரவில் தங்குவதற்கு ஆங்காங்கே இருக்கும் தமிழ்நாடு சுற்றுலா விடுதிகளில் தங்கலாம். இதற்காகக் கட்டணம் எதுவும் செலுத்தத் தேவையில்லை.

தவிரவும், ஒவ்வொரு சுற்றுலாத் தலத்தின் தொன்மையையும் வரலாற்றுப் பெருமையையும் விளக்கிக் கூற ஒரு வழிகாட்டியும் (Guide) சுற்றுலாப் பயணிகளுடன் வருகிறார். சுருக்கமாகச் சொல்லப்போனால், ஒரு அரசு விருந்தாளியாகச் சென்று வருவது போன்ற உணர்வினைப் பெற முடிகிறது.

ஆதலால் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் 'சொகுசு சுற்றுலா' திட்டத்தின் மூலம் விடுப்புப் பயணச் சலுகை (இருவழிப் பயணம்) மேற்கொண்டு அரசு ஊழியர்கள் பயன் பெறலாம்.

**சுற்றுலா செல்வது எப்படி?**

இத்திட்டத்தின் மூலம் சுற்றுலா மேம்பாட்டுக் கழகம் நடத்தும் சுற்றுலாக்களும் சுற்றுலாவுக்கான



**சீன நாட்டின் வானொலி, திரைப்படம், தொலைக்காட்சித் துறையின் மாண்புமிகு அமைச்சர் திரு. ஏ.ஜ. ஜோஹங் அவர்கள் தலைமையில் இந்தியாவிற்கு வந்த எட்டுப் பேர் கொண்ட பிரதிநிதிக் குழுவினர் 8.2.1993 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து இரு நாட்டு உறவுகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். இக்குழு உறுப்பினர் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசுகள் வழங்கினார்.**

நாட்கள் மற்றும் அதற்கான கட்டணங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

**சுற்றுலா மையங்கள்**

சுற்றுலா எண்-1
சென்னை-சிதம்பரம்-பூம்புகார்-நாகூர்-தஞ்சாவூர்-மதுரை-திருச்சி-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 5

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.825.

சுற்றுலா எண்-2
சென்னை-தஞ்சாவூர்-தாராசுரம்-இராமேஸ்வரம்-கன்னியாகுமரி- மதுரை-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 5

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.900.

சுற்றுலா எண்-3
சென்னை-தஞ்சாவூர்-கொடைக்கானல்-பழனி-திருச்சி-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 5

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.875.

சுற்றுலா எண்-4
சென்னை-பாண்டிச்சேரி-பிச்சாவரம்-சிதம்பரம்-ஒகேனக்கல்- உதகை-சென்னை.

சுற்றுலா மேற்கொள்ளப்படும் நாட்கள் - 4

சுற்றுலாவுக்கான கட்டணம் (நபர் ஒன்றுக்கு) ரூ.900.

தொடங்கப்படும் காலங்கள் :

**முதற்கட்டம்**

முதல் பயணம் - ஜூன்-செப்டம்பர்.
பயண நாட்கள் - வாரம் ஒரு முறை
வியாழன் தோறும்.

2-வது பயணம் - பிப்ரவரி-மார்ச்
பயண நாட்கள் - வாரம் ஒரு முறை
வியாழன் தோறும்

3-வது, 4-வது பயணம் - வாரம் ஒரு முறை வெள்ளி தோறும்.

**இரண்டாம் கட்டம்**

அனைத்துப் பயணங்கள் (1,2,3,4)

ஏப்ரல் - மே, அக்டோபர்-ஜனவரி
15 நாட்களுக்கு ஒரு முறை - வியாழன் தோறும் (முதல் வாரம்)

வெள்ளிக்கிழமை - கடைசி வாரம். (வாகனம் இருக்குமேயானால்)

இந்தப் பயணச் சலுகையை, அரசு அலுவலர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**- ஆர்.எஸ். மணி.**

# நூல் நயம்

## அருளொளி திருமுருகன் அந்தாதி

**ஆசிரியர்: வி.கே. சுப்பிரமணியம்**

**வெளியீடு:**

செந்தமிழ்க் கலா நிலையம், பினாங்கு

**விற்பனை உரிமை:**

செந்தமிழ்க் கலா நிலையம்
(இந்தியக் கிளை)
மனை எண் 704,
கொழுந்துறை இல்லம்
அண்ணாநகர் மேற்கு விரிவாக்கம்
சென்னை-600 101

பக்கம்:102 விலை:ரூ.20/-

பினாங்கு நகரில் உள்ள கொடிமலையில் கோயில் கொண்டுள்ள முருகப் பெருமான் மீது அந்தாதி முறையில் பாடப்பெற்ற நூல் இது.

இதிலுள்ள சந்த நயம், படிப்போரை மகிழ்விக்கிறது. பொருள்நயம் இனிமை பயக்கிறது. காவடிச் சிந்து களிப்பு நல்குகிறது. வருகைப் பதிகம் பிள்ளைத் தமிழின் சுவையை அள்ளித் தருகிறது. ஆசிரியரின் மொழிப் புலமையும் கவித்திறமையும் பன்னூற் பயிற்சியும் இந்நூலாற் பெரிதும் விளக்கமுறுகின்றன. வெளிநாட்டிலும் செந்தமிழ் ஓங்கு புகழ் பெற்றுள்ளதையும் திறம்பெறு புலவர் ஆங்கு வதிகின்றதையும் இந்நூல் தெளிவாக்குகிறது.

—தமழ்ப்பித்தன்

## சசிகலா

**ஆசிரியர்: ஆருத்ராபாலன்**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக் குளம்
மேற்கு வீதி, சென்னை-600 004.

பக்கம்:272 விலை:ரூ.34/-

இந்நூலில் படைக்கப்பட்டுள்ள புதுமைப்பெண் சசிகலா உழைப்பால் உயர்ந்த புரட்சிப்பெண். தன் அறிவு ஆற்றலால் தானும் நிமிர்ந்து நின்று, தான் பணியாற்றிய தொழிற்சாலையையும் அமைதியாக இயக்கி, தொழிலாளர் நிர்வாகத்தின் உறவை ஓங்கச் செய்த பாங்கினை இந்நாவல் மனக்கண்முன் காட்சியாக நிறுத்துகிறது.

ஆருத்ரா பாலன் எழுதிய முதல் நாவல் என்றாலும், பல நாவல்களை எழுதி ஆழ்ந்த அனுபவம்பெற்ற முதிர்ச்சியான எழுத்தாற்றலை இந்நூலில் காண முடிகிறது.

—ம.அரி

## ஏணி

**ஆசிரியர்: அய்க்கண்**

**வெளியீடு:**

கார்த்திக் பதிப்பகம்,
36-ஏ-7, கோவிந்தன் சாலை,
சென்னை-600 033.

பக்கம்:132 விலை:ரூ.20/-

நாமெல்லாம் வாழ்க்கையில் உயர்வதற்கு ஏணியாக இருந்து உதவியவர்கள் ஆசிரியப் பெருமக்களேயன்றோ?

இந்த நாடகத்தில் வரும் ஆசிரியர் ஆறுமுகம், அவரது துணைவியார் தெய்வானை ஆகியோரை மையமாக வைத்துப் பின்னப்பட்ட இந்நாடகத்தின் வாயிலாக, பல நல்ல அறிவுரைகளைக் கூறுகிறார் நாடகாசிரியர்.

''ஒவ்வொரு மாணவனும் தன் வாழ்நாளில் ஒரு நாள்— ஒரு நிமிஷம்— 'என்னை இந்நிலைக்கு உயர்த்தியவர் என் ஆசிரியர்' என்று ஒரே ஒரு முறை நினைத்தானென்றால், அதுதான் என் சேவைக்கு உரிய கைம்மாறு என்று கருதுவேன்'' என்று ஒரு காட்சியில் ஆசிரியர் கூறும் கருத்தை நாமெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நடிக்கவும் படிக்கவும் ஏற்ற நாடகம்.

—பி.வி.கிரி

## அறிவியல் அதிசயங்கள்

**ஆசிரியர்: செ.ஆ. கிருஷ்ணமூர்த்தி**

**வெளியீடு:**

மீனா புத்தகப் பண்ணை
வில்லியம் லே-அவுட் 2-வது தெரு,
விழுப்புரம்-605 103.

பக்கம்:156 விலை:ரூ.22/-

அறிவியல் மின்னல் வேகத்தில் சென்று கொண்டிருக்கும் காலம் இது. அன்றாட வாழ்க்கையில் அறிவியலின் துணை இல்லாமல் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் அதன் இன்றியமையாத தேவை உள்ளது. அத்துடன் நாளும் வளர்ந்து வரும் அறிவியல் சாதனங்கள் குறித்து நாம் தெரிந்து கொள்ளும் வகையில் இந்நூலில் பல அரிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

விமானம், கேமரா, தையல் இயந்திரம், சைக்கிள், ஹெலிகாப்டர், அச்சுக்கலை, கடிகாரம், வானொலி, தொலைக்காட்சி இப்படி 45 சாதனங்கள் குறித்த தகவல்கள், அதைக் கண்டுபிடித்தவர்கள் முதலான தகவல்கள் உரையாடல் வடிவில் தரப்பட்டுள்ளன.

மாணவர்கள் மட்டுமல்ல, மற்றவர்களும் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

- 'கிரிஜா'.

## 'இமைகளும் சுமையடி'

**ஆசிரியர்: தேவிபாலா**

**வெளியீடு:**

மயிலவன் பதிப்பகம்
92, கங்கை அம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-26

பக்கம்:192 விலை:ரூ.24/-

இந்நூலில் முதல் கதை 'இமைகளும் சுமையடி'. கல்யாணி பணக்காரக் காமுகன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவள் படும் துன்பங்களை, துயரங்களைச் சொல்வது அவளைத் தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றி, தன் இறுதி மூச்சுவரை அவளுக்குத் துணையாக இருக்கும் பெரியசாமி வித்தியாசமான பாத்திரம்தான். தங்கள் தங்களுடைய எண்ணங்களை அவர்கள் வலியுறுத்திச் சொல்லி நியாயம் கற்பித்துக் கொள்ளும் இடங்களில் எல்லாம் உரையாடல் சிறப்பு.

கல்யாணியின் நன்றியுணர்வு, பெரியசாமியோடு தொடர்ந்து வாழ அவள் விதிக்கும் நிபந்தனைகள் ஒரு காலகட்டத்தில் பெரியசாமியின் கண்ணியம், பெருந்தன்மை, அன்பு இவற்றால் இளகி தான் விதித்த நிபந்தனைகளைத் தானே மீறும் தன்மை ஆகியவை கல்யாணியை ஓர் அற்புதப் பெண்ணாக்குகின்றன.

இரண்டாவது கதை 'சாலையோர சதிகள்'. திருமணத்தின்போது பிறகு செய்து தருவதாகச் சொன்ன நகைகளை வாங்கி வருமாறு ரவியின் தங்கை துரத்தப்படுகிறாள். ரவி, தான் பணிபுரியும் பேங்கில் உள்ள கணக்கொன்றிலிருந்து பணத்தைத் திருடுவதற்கு அவன் நண்பன் திட்டமிடுகிறான். திட்டத்திற்கு உதவியாக, திருடப் போகும் கணக்கிற்கு உரிய குடும்பத்தில் குழப்பத்தை மொட்டைக் கடிதங்களால் உருவாக்கி, கொலை செய்யும் அளவுக்கு அக்குடும்பத்தினர் கொண்டு செல்லப்படுகின்றனர். கதைகள் இரண்டுமே எழுத்தாற்றலால் சிறப்படைகின்றன.

—என்.குமாரசாமி

# தருமபுரி மாவட்டத்தில் பட்டுத் தொழில் வளர்ச்சி

**பட்டுத் தொழிலில், தருமபுரி மாவட்டம் தமிழகத்திலேயே முதன்மைபெற்ற மாவட்டமாகத் திகழ்கிறது; அத்தொழிலுக்கேற்ற மண்வளமும், சீதோஷ்ண நிலையும் அங்குள்ளது. இது குறித்து இந்தக் கட்டுரை மேலும் பல விளக்கங்களைத் தருகிறது.**



பட்டு வளர்ப்பு என்பது வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது; மேலும், அதிக வேலைவய்ப்பும் அந்நியச் செலாவணியும் தரக் கூடியது. தருமபுரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது, இத் தொழில். நம் மாநிலத்திலேயே பட்டுத் தொழிலில் அதிக வளர்ச்சி அடைந்த மாவட்டம் தருமபுரி மாவட்டம் ஆகும். இம் மாவட்டத்தில் மட்டும் 26,000 ஏக்கர் நிலத்தில் மல்பரி சுமார் 40,000 விவசாயக் குடும்பத்தினால் பயிர் செய்யப்படுகிறது.

இந்த மாவட்டத்தின் பெருமை என்னவென்றால், இம்மாவட்டத்தில் தான் மல்பரி இலையிலிருந்து புழு வளர்த்து, பட்டு நூலாக்கி முறுக்கப்பட்டு, அது பட்டுச் சேலையாகவும் பட்டுத் துணிகளாகவும் இங்கேயே மாற்றப்படுகிறது. கர்நாடகத்தை ஒட்டி இம்மாவட்டம் இருப்பதாலும், தட்ப வெட்ப நிலை சாதகமாக இருப்பதாலும் இத் தொழில் இப்பகுதியில் மிகச் சிறப்பாக வளர்ந்து வருகிறது.

**பல்வேறு திட்டங்கள்**

இம்மாவட்டத்தில் பட்டுத் தொழிலை மேலும் அதிகப்படுத்த உலக வங்கி நிதி உதவியுடன் தேசீயப் பட்டு வளர்ச்சித் திட்டம் 1989-90 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ரூ.1,750 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்க் கண்ட அடிப்படை வசதிகள் செய்ய தருமபுரி மாவட்டத்தில் மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது; அது குறித்த விவரம் வருமாறு:

பட்டு முட்டைகளின் தரத்தை உயர்த்துவதற்கு ஆவலப்பள்ளி, பேரிகை, கல்கொண்டபள்ளி, தளி முதலிய இடங்களில் உள்ள பட்டுப் பண்ணைகளை உயர்தர ஆதாரப் பண்ணைகளாக மாற்ற ரூ.89.4 இலட்சம் செலவிலும் - ஓசூர் உத்தனப்பள்ளி மற்றும் உளிமங்கலத்தில் இரண்டாம் நிலை ஆதாரப் பண்ணை உருவாக்க ரூ.100.74 இலட்சம் செலவிலும் ஒரு பட்டுப் பயிற்சிப் பள்ளி உருவாக்கப்படவிருக்கிறது.

விவசாயிகளுக்கு மூலாதாரமாக உள்ள பட்டுப் பூச்சி முட்டைகளை விஞ்ஞான முறைப்படி தரத்துடனும் உற்பத்தியை இருமடங்கு அதிகப் படுத்தவும் ஓசூர், கிருஷ்ணகிரி, பென்னாகரம் முதலிய இடங்களில் பட்டு முட்டை வித்தகங்களுக்காக ரூ.117.07 இலட்சம் செலவிலும் - விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்த பட்டுக் கூடுகளை விற்பதற்காக ஓசூர், தேன்கனிக்கோட்டை, தருமபுரி, பென்னாகரம், அஞ்செட்டி முதலிய ஊர்களில் உள்ள பட்டுக்கூடு அங்காடிகளுக்கு அதிக இடவசதியும் துல்லியமாக எடை போட எலக்ட்ரானிக் கருவிகளும், கூடுவிற்க வரும் விவசாயிகளுக்கும் பெண்களுக்கும் தங்கும் மற்றும் கழிவிட வசதிகளும் செய்ய ரூ.88.29 இலட்சம் செலவிலும் திட்டங்கள் நிறைவேற்றப்படவிருக்கிறது.

இத்துறையில் பணி செய்யும் பணியாளர்களின் தொழில்நுட்ப ஆற்றலை மேம்படுத்தவும் புதிய நபர்களுக்குப் பயிற்சி தரவும் ஓசூரில் ரூ.59.96 இலட்சம் செலவில் ஒரு பட்டுப் பூச்சிப் பள்ளியும் -பட்டுத் தொழிலில் முன்பே ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்குப் புதிய நுட்பத்தைக் கற்பிக்கவும், புதிதாக ஈடுபடுபவர்களுக்குப் பட்டுத் தொழிலைக் கற்றுத்தரவும் தருமபுரியில் ஒரு விவசாயிகள் பயிற்சி மையம் ரூ.46.54 இலட்சம் செலவிலும் - உற்பத்தி செய்யும் பட்டுக் கூடுகளை பட்டு நூலாக மாற்ற - தொழில் நுட்பம் தெரிந்த கைவினைஞர்களை உண்டாக்க ஓசூர் மற்றும் பென்னாகரத்தில் ரூ.55.5 இலட்சம் செலவில் இரு பட்டு நூற்புப் பயிற்சிப் பள்ளியும் உருவாக்கப்பட உள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறவும் விவசாயிகளுக்குத் தேவைப்படும் வங்கிக் கடன் விதைக் குச்சிகள் பட்டு முட்டைகள் எளிதில் கிடைக்கச் செய்யவும் தேன்கனிக் கோட்டை, தளி, பாலக்கோடு, பென்னாகரம், ஏரியூர், லலிகம், தருமபுரி, காவேரிப்பட்டினம், பர்கூர், ஓசூர், பாகலூர், சூளகிரி ஆகிய 12 இடங்களில் தொழில் நுட்பச் சேவை மையங்களை உரு

வாக்க ரூ.298.23 இலட்சம் செல விலும் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் இம்மாவட்டத் தில் மல்பரி பயிர் செய்யும் விவ சாயிகளுக்குப் பயிர்க்கடன் புழு வளர்ப்பு உபகரணங்கள் வாங்கவும் புழுவளர்ப்பு மனை கட்டவும் வங் கிக் கடனாக ரூ.7.06 கோடி வழங் கப்பட உள்ளது. இதில் ஒவ்வொரு விவசாயிக்கும் புழுவளர்ப்பு மனை உபகரணங்கள் வாங்க வங்கிக் கடன் ரூ.20,100 வழங்கப்பட்டு வரு கிறது. தவிரவும் 5,500 விவசாயி களின் பயிற்சி முதலியவற்றுக்கு ரூ.16.5 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

இங்கு, பட்டுநூற்புத் தொழிலை அதிகரிக்கவும் 106 தனியார் புதிய ஆலைகளை உருவாக்கவும் ரூ.72.6 இலட்சம் வங்கிக் கடனாக வழங்கப் பட உள்ளது. மேலும் 400 புதிய பட்டுநூற்புக் கைவினைஞர்களை உருவாக்க ரூ.6 இலட்சம் மானியத் தொகையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் இவ் உலக வங்கித் திட்டத்தின் கீழ் ஒட்டு மொத்தமாக ரூ.17.50 கோடி செலவில் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது; இத்திட்டத்தில் சென்ற ஆண்டு வரை 1074.59 இலட்சம் செல விடப்பட்டுள்ளது. இவ்வாண்டு இதுவரை ரூ.230.4 இலட்சம் செல விடப்பட்டுள்ளது. இத்திட்ட முடிவில் தருமபுரி மாவட்டத்தில் புதிதாக மல்பரி நடவு செய்யப்பட நிர்ண யிக்கப்பட்ட இலக்கான 6,000 எக்டேர் இதுவரை 4,600 எக்டேர் நடவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட முடிவில் தருமபுரி மாவட்டத்தில் 38,000 எக்டேர் மல்பரி பரப்பில் ரூ.128 கோடி மதிப்புள்ள 71 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகளும் 7.1 இலட்சம் பட்டுநூலும் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டங்களினால் இம்மாவட்டத்தில் உள்ள கிராமப் புற மக்களுக்கு அதிகப்படியாக - முக்கியமாக இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படவிருக் கிறது.



**வறட்சி நிவாரணப் பணித்திட்டம்**

இம்மாவட்டத்தில் வறட்சி நிவா ரணப் பணித் திட்டத்தின்கீழ் (டிபிஏபி) 75 ஏக்கர் மல்பரி நடவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் வீட்டைச் சுற்றி - மற்றும் தோட்டங்களைச் சுற்றி மல்பரி மரங்கள் நடவு செய்ய உத்தேசிக் கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.6 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

**மகளிர் மேம்பாட்டுத் திட்டம்**

இத் திட்டத்தின்கீழ் பென்னாகரம், தருமபுரி, அரூர், மொரப்பூர் பாப்பி ரெட்டிபட்டி, ஊத்தங்கரை, பருகூர், மத்தூர், சூளகிரி, கெலமங்கலம், தளி மற்றும் நல்லம்பள்ளி போன்ற 12 ஊராட்சி ஒன்றியங்களில் 750 மகளிர் பயனாளிகள் தேர்ந்தெடுக் கப்பட்டு, அவர்கட்குப் பட்டு வளர்ச் சித் திட்டத்தின்கீழ் வங்கிக் கடனா கத் தலா ரூ.12,950 வழங்க உத் தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மகளிர் மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்பட்டு வருகிறது.

**மலைவாழ்மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இத் திட்டத்தின்கீழ், சித்தேரி மலைப்பகுதியில் உள்ள 25 மலை வாழ் குடும்பங்கள் இந்த ஆண்டு பயன்பெறும்; அவர்கட்கு ரூ.1.54 இலட்சம் கடன் மற்றும் பயிற்சிக் காகச் செலவிடத் திட்டமிடப்பட்டு உள்ளது.

**சிறப்பு ஆதிதிராவிடர் நலத்திட்டம்**

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு மல்பரி பயி ரிட்டுப் பட்டுப் புழு வளர்க்க மானியத்துடன் கூடிய கடன் ரூபாய் 1.96 கோடி (ஒரு கோடியே தொண் ணூற்றாறு இலட்சம்) அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் மூலம் 400 ஆதிதிராவிடர்கள் பயன்பெறு வார்கள்.



**பென்னாகரம் பட்டுத் தொழில் அங்காடி**

நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்குத் தலா ஒரு ஏக்கர் பயிர் செய்யக் கூடிய நிலம் வாங்கிக் கொடுத்து பட்டுத் தொழிலில் ஈடபடக் கடன் வசதிகள் வழங்கப்படும். இத் திட்டத்தின்கீழ், அரூர் மற்றும் பென்னாகரம் ஒன்றியங்களில் தலா 100 ஆதிதிராவிடர்கள் வீதம் 200 ஆதிதிராவிடர்கள் பயன்பெறு வார்கள். இத் திட்டத்தின்கீழ் ஒவ் வொரு பயனாளிக்கும் ரூ.64,000-ம் மானிய வசதியுடன் கடன் வழங்கப் படும். இதில் ரூ.15,000 மானிய மாகவும், ரூ.16,000 ஆதாரக் கடனாக 'தாட்கோ'வும், ரூ.33,000 வங்கிகள் மூலமும் கடன் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

நிலமற்ற ஆதிதிராவிடர்களுக்கு மல்பரி பயிரிட்டு, பட்டுத் தொழி லில் ஈடுபட ரூ.34,000 மானியத் துடன் கூடிய கடன் வசதி ஏற்படுத் திக் கொடுக்கப்படும். இத்திட்டம் பருகூர் மற்றும் மத்தூர் ஒன்றியங் களில் செயல்படுத்தப்பட உள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் தலா 100 பயனாளிகள் வீதம் மொத்தம் 200 ஆதிதிராவிட விவசாயிகள் பயன்பெறுவர். ஒவ்வொரு பயனா ளிக்கும் ரூ.15,000 மானியமாக வும், ரூ.8,500 தாட்கோ மூலம் ஆதாரக் கடனாகவும் வங்கிகள் மூலம் ரூ.10,500 கடனாகவும் வழங்கப்படும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்திக் கண்காணிக்க மாவட்ட அளவில் ஒரு குழு மாவட்ட ஆட்சித் தலை வரைத் தலைவராகக் கொண்டு செயல்படும்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு விவசாயியும் ஒரு ஏக்கர் மல்பரி சாகுபடி செய்து, பட்டுப் புழு வளர்ப்பில் ஈடுபடுவதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ.25,000



வருமானம் பெறுவர். இதன் மூலம் 400 ஆதிதிராவிட விவசாயக் குடும்பங்களின் பொருளாதாரம் மேம்பட்டு வாழ்க்கைத் தரம் உயர்வ தோடு 2000 வேலையற்ற ஆதி திராவிடர்களுக்கும் இத்தொழில் மூலம் வேலைவாய்ப்புக் கிடைக்கும். எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 15 ஆயிரம் ஏக்கர் அளவில் புதிதாக மல்பரி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 40,000 கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

**உலகத் தொழிலாளர் நிறுவனம் (ஐ.எல்.ஓ)**

இத்திட்டத்தின் கீழ் தளி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் மல்பரி நடவு செய்யப்படும் திட்டம் செயல்படுத் தப்பட்டு வருகிறது.

**ஸ்வில் வளர்ச்சிக் கழகத்தின் திட்டங்கள்**

பட்டுத் தொழிலில் பெண்கள் 75 சதவிகிதம் ஈடுபட்டு உள்ளதால் அவர்களுக்காகக் கூட்டுறவுச் சங் கங்கள் மருதேபள்ளியில் பட்டுப்புழு வளர்ப்புச் சங்கமும் கம்பைநல்லூர் மரவாடி மற்றும் சூளகிரி பகுதியில் பட்டுநூற்புச் சங்கமும் சிறப்பாக முழுவதும் மகளிருக்காக என்றே செயல்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தில் ஆண்டு ஒன்றுக் குச் சுமார் 154 இலட்சம் பட்டு முட்டைகள் தேவைப்படுகிறது. இதற் குத் தேவையான விதைக்கூடுகள் மற் றும் தமிழ்நாடு முழுவதுக்கும் தேவை யான பட்டு முட்டைகளின் தேவைக்கு வேண்டிய விதைக் கூடுகள் சுமார் 10 இலட்சம் டன் தேன்கனிக்கோட்டை பகுதியிலிருந்து உற்பத்தி செய்யப் பட்டு விநியோகம் செய்யப்படுகிறது என்பது இம்மாவட்டத்தின் மிகச் சிறப்பு ஆகும். பட்டு முட்டைகள் அரசு பட்டுமுட்டை வித்தகங்களில் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தன; தற்போது விவசாயிகளின் பெருகிவரும் முட்டைகளின் தேவை யைக் கவனத்தில் கொண்டு தனி யாரும் பட்டு முட்டை உற்பத்தி செய்யத் தேசியப் பட்டு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப் பட்டு, தருமபுரி பகுதியில் மூன்று வித்தகங்களும் கிருஷ்ணகிரி பகுதி யில் மூன்று வித்தகங்களும் ஓசூர் பகுதியில் ஐந்து வித்தகங்களும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின் றன. தேசியப்பட்டு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், இத் தனியார் வித்த கங்களுக்கு மானியம் வழங்கப்பட்டு உள்ளது. இத் தனியார் வித்தகங் களுக்குத் தேவையான விதைக் கூடுகள் பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் வழங்கப்படுகிறது.



பாலக்கோடு பட்டுநூல் மெருகூட்டு மையம்



பாப்பாரப்பட்டி மல்பரித் தோட்டம்

பட்டுநூற்பு அபிவிருத்தி செய் யப் பட்டுநூற்பாளருக்காக 2½ சதவிகித வட்டி மானியம் வழங்கப் படுகிறது. இதன்மூலம் அதிக நூற் பாளர்கள் இம்மாவட்டத்தில் பயன் பெற்று வருகின்றனர். மேலும் பலமுனை நூற்பு இயந்திரம், கே.ஆர்.பி. டேம், மற்றும் ஓசூர் பகுதியில் நல்ல முறையில் செயல் பட்டு வருகிறது. பட்டுநூற்புப் பயிற்சி பெறுவதற்கெனப் பென்னா கரத்தில் ஒரு பயிற்சி மையம் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம் பட்டுநூற்பாளர்களால் அனுப்பப் படும் பணியாளர்களுக்கும் மற்றும் பயிற்சி பெறுகிறவர்களுக்கும் மாதம் ரூ.250 உதவித் தொகையுடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்டு நூற்பகங்கள் நல்ல முறையில் செயல்படப் புகைவராத சிக்கனப் பொருளாதார அடுப்புகள் அமைக்க 30 சதவிகித மானியம் வழங்கப் படுகிறது. வெற்றிகரமாகப் பட்டுக் கூடு மகசூல் அறுவடை செய்ய நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் முக்கியத்துவத்தைக் கருதி விவசாயி களுக்கு25 சதவிகித மானிய விலை யில் பார்மலின் மற்றும் பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமிநாசினிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில்தான் பட்டு வளர்ச் சித் துறையின் மூலம் அது தொடர் பான எல்லாத் திட்டங்களும் சிறப் பாகச் செயல்படுத்தப்பட்டு வரு கிறது என்பது பெருமைக்குரியது.

நீர்ப்பாசன வசதி குறைவாக உள்ள இம்மாவட்ட விவசாயி களுக்குப் பட்டுத் தொழில் ஓர் வரப்பிரசாதமாகும். •

“ கிருஷ்ணகிரிக்கு வடமேற்கே, சீர்கெட்டுக் காட்சிதரும் தேவர் குந்தாணி என்ற நகரைத் தலைநகராகக் கொண்டு 40 ஆண்டுக்காலம் ஆட்சி செலுத்தியவன் பேரரசன் வீரராமநாதன் என்ற ஒய்சாளப் பேரரசன்; இது நடந்தது 13-ஆம் நூற்றாண்டில்.

## தமிழ் வளர்த்த பெரியார்:



# தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து

**- மயிலை முத்தெழிலன்**

**ப**ள்ளி செல்லாப் பாப்பா முதல் பள்ளி செல்லும் பிள்ளைகள் வரை படித்து மகிழும் வகையில், ஆங்கில மழலைப் பாடல்கள் (Nursery Poems) போன்று நயங்கொண்ட பாடல்கள் எழுதப்படவேண்டும் என்று பேராசிரியர் மயிலை சிவமுத்து எண்ணினார். எனவே, அவர் தாம் எழுதிய பாடநூல்களில் பல கவிஞர்களின் பாடல்களை இடம் பெறச் செய்ததோடல்லாமல், தாம் எண்ணிய வகையிலும் பாடல்களைப் பாடித் தம் பாடநூல்களில் இடம் பெறச் செய்தார். எதையும் எண்ணிச் செய்ய வல்ல மயிலை சிவமுத்து அவர்கள், மழலைப் பாடல்களை எழுத ஆழ்ந்து சிந்தித்தார்.

ஒவ்வொரு பாட்டை எழுதவும் பல நாட்கள் சிந்தித்தார். அதனால்தான் அப்பாடல்கள் நீதியும் புதுமையுங் கொண்டிருந்ததோடல்லாமல் எளிமையும் இனிமையுங் கொண்ட அருமையான பாடல்களாக இருந்தன.

குழந்தைகள் தாங்களே படித்து மகிழும் வகையில், அவர்கள் அறிந்த சொற்களைக் கொண்டு பாடியுள்ளார். அப்பாடல்களை ஒரு முறைப் படித்தாலும் மனத்தில் பதியும் வண்ணம் பாடியிருப்பது அவருடைய பாடல்களின் தனிச் சிறப்பாகும்.

அவரெழுதிய பாடல்கள் பலவற்றைத் தொகுத்து 'முத்துப் பாடல்கள்' என்ற நூல் ஒன்று வெளிவந்தது. அந்நூல் நடுவணரசின் பரிசையும் பெற்றது. அப்பாடல்கள் முத்துப் (புலவர்) பாடிய பாடல்கள் என்பது மட்டுமல்ல, அவை ஒவ்வொன்றும் முத்தான பாடல்கள் என்பதாலேயே, அந்நூல் 'முத்துப் பாடல்கள்' எனப்பட்டது.

அப்பா அம்மா வாரும்;
பலகை புத்தகம் தாரும்!
பாட சாலை போவேன்;
பெரிய மனிதன் ஆவேன்!
காசும் பணமும் பெறுவேன்;
கையில் வாரித் தருவேன்!

என்ற இப்பாடல் ஆங்கில மழலைப் பாட்டைப் போன்று ஒவ்வொரு பாட்டின் இறுதிச் சொல்லும், அடுத்த பாட்டின் இறுதிச் சொல்லுடன் ஒன்றி வந்து ஓசை நயம் ஊட்டுவதை உணரலாம். இவ்வமைப்பை முதன் முதல் திட்டமிட்டு மழலைப் பாட்டில் எழுதியவர் மயிலை சிவமுத்து என்றால் மிகையாகாது. அவர் எழுதிய மழலைப் பாடல்களில் பலருடைய உள்ளத்தைக் கவர்ந்த பாடல் 'மாமி சுட்ட பிட்டு' என்ற பாட்டாகும். அப்பாட்டை ஆயிரக்கணக்கான பாப்பாக்கள் பாடி மகிழ்ந்துள்ளனர்.

மாமி சுட்ட பிட்டு;
மடியில் வாங்கிக் கட்டு!
சீனி சர்க்கரை இட்டு;
சிறிது நெய்யும் சொட்டு!
உண்டு ஏப்பம் விட்டு;
ஓடி வாநீ பட்டு!

என்ற மிகச் சுவையான இப்பாடலில் குழந்தைக்கேற்ற பிட்டைக் குறிப்பிடுவதோடல்லாமல், 'நெய்யைக் கொட்டக் கூடாது' 'சொட்டு விட வேண்டும்' என்று சொல்வது பாட்டை நெய் மணக்கச் செய்கிறது.

மற்றொரு பாட்டில் குழந்தையின் பிற்காலத்தில் அது எவ்விதம் விளங்க வேண்டும் என்பதையும், என்ன செய்ய வேண்டும் என்பதையும் குழந்தைகள் உள்ளத்தில் கொள்ளச் செய்கின்றார்.

அப்பா வைப்போல் நான்ஆனால்;
ஆயிரம் ரூபாய் சேர்த்திடுவேன்;
ஆனை குதிரை வாங்கிடுவேன்!

அப்பா வைப்போல் நான்ஆனால்;
எங்கும் பொன்னே குவித்திடுவேன்;
எல்லா ருக்கும் அளித்திடுவேன்!

அப்பா வைப்போல் நான்ஆனால்
உலகம் முழுவதும் சுற்றிடுவேன்;
உண்மை பலவும் கற்றிடுவேன்!

ஈற்றெதுகையோடு அமைந்த இப் பாடல் அறுபதாண்டுகளுக்கு முந்திய நிலையைச் சுட்டுவதால், 'ஆயிரம் ரூபாய்' என்பது பெருந்தொகையாகவும், 'ஆனை, குதிரை' வாங்குவது பெருமைக்குரியதாகவும் குறிப்பிடப்பட்டாலும், பாடல் மூலம் குழந்தைக்கு உரிய உயரிய எண்ணத்தை ஊட்டுவது என்றைக்கும் தேவையான கருத்தாகும். இப்பாடலில் 'அப்பாவைப் போல் நானானால்' என்ற சொல் அடிக்கடி இடம்பெற்று பாட்டிற்கு ஒரு புதிய பொலிவைத் தருகிறது.

இவ்விதம் ஓசை நயங்கொண்ட பாடல்களைப் பாடிய தோடல்லாமல், சிறுவர்கள் ஆடிப்பாடும் வகையிலும் பல பாடல்கள் பாடியுள்ளார். மிருகங் களையும், பறவைகளையும் பாட்டில் வைத்துப் பாடியுள்ள ஒரு பாட்டு,

மயில் போல் ஆடுவேன்;
மான் போல் ஓடுவேன்!
குயில் போல் பாடுவேன்;
குருவி போல் தேடுவேன்!
பூனை போல் பதுங்குவேன்;
புலி போல் பாய்வேன்!
ஆனை போல் நடப்பேன்;
ஆருக்கும் நான் அஞ்சேன்!

என்ற இந்தப் பாடல் குழந்தைகள் இசையோடு பாடும் வகையிலும், எதுகை, மோனை நிறைந்ததாகவும் பாடப் பட்டுள்ளதல்லவா! இப்பாடலைப் பாடு வதோடல்லாமல் குழந்தைகள் ஆடிடவும் பயன்படும் வகையில் அமைந்த 'அபிநய மழலைப் பாடல்' எனலாம்.

எல்லோரும் குழந்தைகளுக்குத் தாலாட்டு தான் பாடியுள்ளனர். ஆனால் எதையும் புதுமையாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினரான மயிலை சிவமுத்து 'பாலர் பள்ளியெழுச்சி' பாடியிருக்கிறார்.

பொழுது விடிந்தது எழுந்திரு பாப்பா;
பொன்வண்டு போலநீ எழுந்திரு பாப்பா!
சிட்டுக் குருவிபோல் எழுந்திரு பாப்பா;
சிரித்த முகத்துடன் எழுந்திரு பாப்பா!



'ஜே.ஜே.92' என்கிற உயர்ரக நெற்பயிரைக் கண்டுபிடித்தது ஆடுதுறை விவசாய ஆராய்ச்சிப் பண்ணைதான்; ஆனால், தருமபுரி மாவட்ட மண்ணிலும் 'ஜே.ஜே.92' அமோகமாக விளை கிறதாம்- இதைப் பையூர் ஆராய்ச்சி நிலையத்தார் தெரிவித்திருக்கிறார்கள்.

இவைகளைப் போன்று பல பாடல் களைப் பாடிய, தமிழ்நெறிக் காவலர் மயிலை சிவமுத்து, தமிழின் பெருமையை விளக்கும் பாடல் இது,

எங்கள் தமிழ் நல்ல தமிழ்;
எழுத பேச எளிய தமிழ்!
ஏணை ஆட்டி எங்கள் அன்னை
இன்ப மாகப் பாடுந் தமிழ்!
குழந்தை யாகத் தவழ்ந்த போது
கொஞ்சி முத்தம் கொடுத்த தமிழ்!
பாலுந் தேனும் கலந்த தமிழ்;
நாளும் நாங்கள் கற்கும் தமிழ்!

இந்தப் பாடலில், எத்துணை எளிய நடையில் தமிழின் இனிமையையும், பெருமையையும் கூறிய தோடல்லாமல், அது நம் தாய்மொழி என்பதையும் குழந்தைகளே கூறும்படிப் பாடியுள்ளார்.

மற்றொரு பாட்டில் குழந்தைகள் உடலை வலிமையுடையதாக வைத்துக் கொள்ள, உடற்பயிற்சி செய்யவேண்டும் என்கிறார். பள்ளியில் ஆசிரியர் கற்பிக் கும் உடற்பயிற்சி மட்டும் போதாது. வீட்டிலேயும் செய்யவேண்டும் என்கிறார். வீட்டில் உடற்பயிற்சியா என்று கேட்கும் பிள்ளைகளுக்கு விடையளிக்கும் விழுமிய பாட்டு இது. பாட்டின் தொடக்கத்தில் இராமாயணம், மகாபாரதம் போன்ற வற்றை மாணவர்கள் அறியவேண்டித் தூண்டுகிறார்.

வீமனைப் போல் வலுவேண்டும் - நல்ல
வீரமும் தீரமும் வேண்டும்! - ரகு
ராமனைப் போல் குணம்வேண்டும்-அந்த
ராவணன் ஆண்மையும் வேண்டும்!

என்று கூறிவிட்டு,

கட்டையும் வெட்டுதல் வேண்டும்-அதைக்
கட்டிச் சுமந்திடல் வேண்டும்!-சிறு
பெட்டி எடுத்திடக் கெஞ்சும் - ஒரு
பேதையைக் கண்டுல கஞ்சும்.

என்ற வரிகளின் மூலம் சோம்பல் உடையவனை, வீட்டுவேலை செய்ய மறுப்பவனை உலகத்தினர் வெறுப் பார்கள் என்று மாணவர்க்கு உணர்த்து கிறார்!

அன்னையின் அன்பைப் படம் பிடித்துக் காட்டும் பாடலைப் படித் தாலும், படிக்கக் கேட்டாலும், நம் விழிகள் கண்ணீர் மழையைப் பொழியும். அவ்வளவு உருக்கமாக அப்பாடலைப் பாடியுள்ளார். அவருடைய அன்னையை எண்ணிப் பாடியதால்தான் அந்தப் பாடல் அத்துணை உருக்கமாக அமைந்து விட்டது. இதோ அந்தப் பாடல்,

என்னைப் பெற்ற நற்றாயே,
எங்கே அன்பு கற்றாயே!
'என்றன் கண்ணே!' என்பாயே,
எனக்குத் தந்தே தின்பாயே!
'அம்மா, தலைநோய்!' என்றாலும்;
அலுத்து களைத்து நின்றாலும்,
அழுது கண்ணீர் வடிப்பாயே;
அன்பால் நெஞ்சம் துடிப்பாயே!

என்று நீண்டு செல்கிறது இப்பாடல்.

மயிலை சிவமுத்து தனித்தன்மை உடைய தகைசான்ற கவிஞராவார். அவர் மறைந்து கால் நூற்றாண்டாகிவிட்டது. கடந்த ஆண்டு, அவருடைய நூற்றாண்டு, அவர் மறைந்தாலும், அவரது படைப் புகள் என்றும் நிலைத்து நிற்கும் தன்மையன!

# வீர வரலாறு கூறும் நடுகற்கள்



**கா**விரியின் கானல் வரிகளால் இயற்கைக் கவின் கொஞ்சும் காட்சிகளும், குறிஞ்சியும் முல்லையும் மருதமும் ஒருங்கே அமைந்த மாட்சிகளும் காவியம் பாடிடக் கருப்பொருள் குவித்திடும் மாவட்டம் தருமபுரி மாவட்டம்.

இப்பகுதி தமிழகத்தின் முகப்புப் பகுதியாக இலங்கு வதால், பிற பகுதியினர் நுழைகின்ற வாயிலாகத் திகழ்ந்தது. எத்தனை மன்னர்கள் கலை தவழும் இப் பகுதியைக் கொலை தவழும் களமாக்கினர்.

இத்தனை மன்னர்களும் இப்பகுதியைத் தம் ஆட்சிக்கு உட்படுத்த எத்தனைப் போர்களை நடத்தியிருக்கிறார்கள். அத்தனைப் போர்களுக்கும் ஈடுகொடுத்து வரலாற்றைத் தன்னகத்தே கொண்டது தகடூர் என்னும் தருமபுரி மாவட்டம். அதனால் வீர வரலாற்றுக்கு எடுத்துக் காட்டாக இம்மாவட்டத்தில் வீர நடுகற்கள் ஏராளமாக உள்ளன. தமிழக வரலாற்றையே மாற்றியமைக்கக் கூடிய வகையில் அரிய செய்திகளை இந்த நடுகற்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.

## புலவர் கி. நரேந்திரன்

தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவிக் கிடக்கும் ஏராளமான நடுகற்களில், அழிந்துபோனது போக நல்ல நிலையில் உள்ள நடுகற்களைத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறையும், தருமபுரி மாவட்ட வர லாற்றுப் பேரவையும் படியெடுத்துள்ளன. சில நடுகற்கள் தருமபுரியில் உள்ள அருங்காட்சியகத்தில் வரலாற்றுப் பேரவையால் அளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகின்றன.

### நடுகல் இலக்கணம்

''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை வாழ்த்தலென்
றிருமூன்று வகையிற் கல்லொடு புணர''

- என்று நடுகல் என்பது என்ன என்பதற்குத் தொல் காப்பியம் நமக்கு இலக்கணம் பகர்கிறது. பழங்காலத்தில் மாற்றானொடு பொருது இறந்த மன்னர்களுக்கும், வீரர்களுக்கும் வீரக்கல் நட்டு வழிபடுவது வழக்கம்.

நடுகல்லில் இறந்துபட்ட மறவனின் பெயரும், சிறப்பும், பெற்ற வெற்றிகளும், போர் நடந்த விவரமும் குறிக்கப்படுகிறது என்பதை

'ஆடவர்
பீடும் பெயரும் எழுதி அதிர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்'

- என அகநானூற்றுப் பாடல் தெளிவாகச் சொல் கிறது.

இத்தகு நடுகல்லைத் தவிர வேறு தெய்வம் இல்லை யெனத் தமிழர் நம்பினர். அதனைப் புறநானூற்றின் 335-ஆம் பாடல் நமக்குக் காட்டுகிறது.

### நடுகல் அமைப்பு

புறமுதுகு காட்டா வீரவிழுப்புண்பட்டு, சிறந்த முறையில் போரிட்டு வீரமரணம் அடைந்த வீரர்களுக்கு எடுத்த நடுகற்கள் மூன்று நிலைகளை உடையதாக உள்ளன. நடுகல்லின் கீழ்ப்பகுதியில் போர்க்காட்சியும், நடுப்பகுதியில் போரில் பட்டு வீர சுவர்க்கம் புகும் வீரனைத் தேவமாதர் தாங்கிச் செல்லும் காட்சியும், மேல்பகுதியில் அவ்வீரனின் சமயநிலையை உணர்த்த சிவன், விஷ்ணு சின்னமும் வடிக்கப்பட்டுள்ளன.

நடுகற்களில் உருவம் அமைக்கப்பட்ட முறையானது முதலில் கோட்டு உருவங்களையும், பின்னர் சிறிது சிற்ப வடிவமாகவும் பின்னர் புடைப்புச் சிற்பங்களாகவும் வடிக்கப்பட்டன. அவ்வாறு அமைக்கப்பட்ட நடுகற் களைப் பண்டைய, இடைக்கால, பிற்கால நடுகற்கள் என மூவகைப்படுத்தலாம்.

### இருளப்பட்டி நடுகற்கள்

தருமபுரி மாவட்டம் அரூருக்கு அருகில் உள்ள இருளப்பட்டியில் (பாப்பம்பாடி) கிடைத்த இரண்டு நடுகற்கள் மிகவும் தொன்மையானவை. இதனைக் கண்டு பிடித்தவர் தூரிஞ்சிப்பட்டி ஆசிரியர் புது.போ.

வெங்கடராமன் அவர்கள். இந்த நடுகற்கள் தமிழக வரலாற்றாய்விற்கும், தொல்லெழுத்தாய்விற்கும் சிறந்த ஆதாரங்கள் என்றும், இக்கற்களில் உள்ள கல்வெட்டுக்கள் தமிழ், தமிழ்வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக் களிலும் அமைந்துள்ளன. அதனால் தென்னிந்தியத் தொல்லெழுத்தியலைப் படித்தறியச் சிறந்த கருவூலம் என்றும் தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை யின் மேனாள் இயக்குநர் திரு இரா. நாகசாமி அவர்கள் கூறியுள்ளார்.

இந்த நடுகற்களை அவ்வூர் மக்கள் வேடியப்பன் என்று அழைக்கின்றனர். ஒரு நடுகல்லில் வீரன் சினத்துடன் போரிடும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. அவனின் வலக் கையில் வாளும், இடக் கையில் கேடயமும் உள்ளன.

மற்றொரு நடுகல்லில் இரண்டு வீரர்களின் உரு வங்கள் வடிக்கப்பட்டுள்ளன. அவர்களின் வலக் கையில் வாளும், இடக் கையில் கேடயமும் உள்ளன. ஒவ்வொரு வரின் வலக் கைகளின் கீழேயும் தனித்தனியாகக் கல் வெட்டுக்கள் உள்ளன. அவை அவர்களின் வீரச் செயல்கள் பற்றிக் கூறுகின்றன.

**முதல் வீரனின் கல்வெட்டு:**

''வாணவரும் அரைசரு சேவகன் உழமுனுகன் மகன் விசயமங்கல மாண்ட விண்ணப் பேரேனாதி கல்''

**இரண்டாம் வீரனின் கல்வெட்டு :**

''விண்ணப் பேரேனாதி சேவகன் கொற்றந்தை கோடன் கல்''

முதல் நடுகல்லிலுள்ள கல்வெட்டால் மூன்று அரசர்கள் அறியப்படுகிறார்கள். கோவிசைய விண்ண வர்மன் இந்த அரசன் காலத்தில்தான் இந்த நடுகல் எடுக்கப்பட்டது. குருவுடையூர் நாட்டை ஆளும் கங்க மன்னன்; இந்த மன்னன் மீதுதான் படையெடுப்பு நடந்தது. கங்கமன்னனைப் பாதுகாக்க வந்த வாண அரசன். இந்த அரசன்தான் போரில் இறந்துபட்டான்.

இரண்டாவது கல்லிலுள்ள கல்வெட்டால் வாண வருமனின் படையில் பணியாற்றும் உழமுனுகன் மகன்



விசயமங்கலத்தை ஆண்ட விண்ணப் பேரனாதி என்ப தும், விண்ணப் பேரனாதியிடம் படையில் பணியாற்றும் கொற்றந்தை கோடன் என்பதும் தெரியவருகிறது. இவர்கள் வாண அரசனின் படைத்தலைவர்களாக இருக் கலாம். இவர்களும் இப்போரில் இறந்துபட்டனர்.

அகநானூற்றின் 301-ஆவது பாடலை அதியன் விண்ணத்தன் என்ற புலவர் பாடியுள்ளார். விண்ணத்தன் என்பவன் அதியனின் மகனாக இருக்கலாம். இந்த நடுகற்கள் அதியன் ஆண்ட நாட்டில் இருப்பதாலும், இதில் கூறப்பட்டுள்ள அரசன் கோவிசைய விண்ண வர்மன் காலத்தில் இந்த நடுகற்கள் நடப்பட்டிருப்பதும் ஆய்வுக்குரியதாகும். இந்த விசைய விண்ணவர்மன் அதியன் விண்ணத்தனின் வழிவந்தவனாகவும் இருக் கலாம்.

கங்க அரசர்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் தமிழ கத்தில் ஆட்சி செய்தார்கள் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்த நடுகற்களினால் நாம் அறியும் செய்தி குருவகையூரை ஆண்ட கங்க மன்னன் மீது படை யெடுத்து வந்தபோது கங்க மன்னனுக்கு வாண அரசன் உதவ வந்தான். அந்தப் போரில் அவனும், அவனின் படைத்தலைவர்களும் மாண்டனர் என்பதாகும். இதனால் விண்ணவர்மன், கங்க மன்னன், வாணவர்மன் ஆகிய மூன்று அரசர்களும் நட்பு பூண்டிருந்தனர் என்பது தெளி வாகிறது.

இந்தப் போரில் படையெடுத்து வந்த மன்னன் யார்? போரின் முடிவு என்ன? என்பது தெரியவில்லை. இருப் பினும் தமிழகத்தின் இருண்டகாலம் எனக் கூறப்படும் கி.பி.4,5-ஆம் நூற்றாண்டுகளின் வரலாற்றினை அறிய இந்த நடுகற்கள், நமக்குச் சிறிதே உதவுகின்றன.

பாலவாடி நடுகற்கள்

தருமபுரி மாவட்டம் பாலவாடி கிராம ஊரின் நேர் கிழக்கே ஏரிக்கரையை அடுத்த பெருமாள் கோயிலின் முன்புறம் இரு நடுகற்கள் உள்ளன. நீண்ட சதுரக்கருங் கற்களினால் வீரர்களின் உருவம் போர் செய்யும் நிலை யில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. கையில் வில்லும் அம்பும் ஏந்திப் பகைவரை எதிர்க்கின்ற பாவனையில் அமைந்துள்ள சிற்பங்கள் உன்னதமாக உள்ளன. ஒரு சிற்பத்தின் தலையில் நீண்ட சடை காணப்படுகிறது. அந்தக் காலத்தில் வீரர்கள் பூச்சூடி, போருக்குச் சென் றனர் எனப் புறப்பொருள் வெண்பாமாலை கூறுவதற்கு இது சான்றாகும். தலைப்புறத்தில் வட்டெழுத்தில் வீரரின் பீடும், பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

வடபுறக் கல்லினால் அறியப்படும் செய்தி பரை களாடர் என்பவர் தகடூர் நாட்டின் படையோடு போரிட்டு இறந்துபட்டார் என்பது தெரிகிறது. அதனால், பாலவாடி தகடூர் நாட்டின் ஆதிக்கமின்றி தனி அரசனால் ஆளப்பட்டது என்பதும், எக்காரணம் பற்றியோ தகடூர் நாட்டின் படைகளுக்கும் பாலவாடி படைகளுக்கும் போர் நிகழ்ந்துள்ளன. அதில் வீரத்துடன் போரிட்ட பரைக் களாடனாருக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி.7 அல்லது 8-ஆம் நூற்றாண்டாக இருக்கலாம்.

தென்புறக்கல்லால் அறியப்படும் செய்தி ஸ்ரீ புருச வர்மன் கங்க அரசனின் 10-ஆவது ஆட்சியாண்டில் இக்கல்வெட்டு எடுக்கப்பட்டுள்ளது. இதில் பாலவாடிக்

கோட்டையைப் பெரும்பாண முத்தரைசர் என்ற குறுநில மன்னன் ஆட்சி செய்துள்ளார். பாலவாடிக்குக் கிழக்கே 10 கி.மீ. தொலைவிலுள்ள இன்றைய சோகத்தூர் (போகற்றூர்) கள்வர்கள் பாலவாடி ஆநிரைகளைக் கவர்ந்து சென்றபோது போர் நடந்துள்ளது. அந்தப் போரில் கோட்டையைக் காத்துநின்ற சாத்தனார் என்பவர் தீரத்துடன் போரிட்டு மாண்டார். அவருக்காக இக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலை, மாற்றாணை தன் நாட்டு எயிலுக்குள் புகாமல் மதிலைக் காத்தல் நொச்சித்திணை என இலக்கணம் கூறுகிறது. இங்குச் சாத்தனார் தன் நாட்டுக் (பாலவாடி) கோட்டையைக் காக்க வீரத்துடன் போரிட்டதால் நொச்சிச் சாத்தனார் எனச்சிறப்பித்துச் செய்யப்பட்டுள்ளார்.

**மகேந்திரவர்மன்**

பலிஞ்சர அள்ளியில் கிடைத்த நடுகல்லால் மகேந்திர வர்மன் தகடூரை ஆண்ட செய்தியை அறிய முடிகிறது.

இக்கல்வெட்டு வட்டெழுத்தால் அமைந்துள்ளது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளிவைத்து எழுதப்பட்டுள்ளது சிறப்பம்சமாகும். மகேந்திரவர்மனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் காடந்தைகள் என்பவர்களுக்கும், புதுப் பள்ளிகள் என்பவர்களுக்கும் நடந்த போரில் காடந்தைகள் படைத்தலைவன் எருமெதிகாரி என்ற வீரன் இறந்துபட்டான். அவனுக்காக இக்கல் எடுக்கப்பட்டுள்ளது.

**நவகண்டம்**

போரில் வெற்றி பெறுவதற்காக வீரர்கள் தம் உறுப்புகளை வெட்டி, கொற்றவைக்குக் காணிக்கையாகப் படைத்து வழிபட்ட செய்தியை இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

அந்த இலக்கியங்களுக்குச் சான்றாகக் கிருட்டிணகிரிக்கு அருகில் குந்தாணி என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட நடுகல் விளங்குகிறது. இந்தக் கல்லில் பலிக்கொடை புரியும் காட்சி அமைந்துள்ளது. ஒரு வீரன் நின்றவாறு தனது கழுத்தைத் தானே வெட்டிக் கொள்வதும், பக்கத்தில் குதிரைமீது அமர்ந்த மற்றொரு வீரன் அந்த வீரனின் தலையைத் தட்டில் தலைக்கு மேல் தாங்கிச் செல்வதையும் காணலாம்.

காவேரிப்பட்டிணம் அருகிலுள்ள பென்னேசுவர மடத்தில் நவகண்ட நடுகற்கள் பெரிதும் காணப்படுகின்றன. நவம் என்றால் ஒன்பது; கண்டம் என்றால் துண்டு. கை,கால்,மூக்கு,காது,கண் போன்று உடலை ஒன்பது துண்டங்களாக வெட்டி இறுதியில் தன் தலையையும் வெட்டித் துர்கைக்குப் படைப்பதாகும்.

**அரிய நடுகற்கள்**

பிக்கன அள்ளியில் கண்டெடுக்கப்பட்ட நடுகல் ஒருவீரன் புலியுடன் டும்போர் புரிந்து, அதன் வாயில் வாளைப் பாய்ச்சிக் கொல்கிறான். அவனுடன் அவனின் வேட்டை நாய்களும் புலியை எதிர்த்துப் பாய்கின்றன. போரில் வீரனும் இறக்கிறான். அவனின் வீரத்தைப் பாராட்டி எடுக்கப்பட்ட கல்லே புலிகுத்தப்பட்டான் கல் ஆகும். புலியுடன் வீரன் போரிடுவதும் - நாய்கள் தாக்குவதும் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

★ சுவாமி விவேகானந்தர் 1901-இல் தர்மபுரிக்கு வருகை தந்திருக்கிறார்; அதன் நினைவாகவே விவேகானந்தர் கல்விச் சங்கம் இங்கே உருவாயிற்று. 'விவேகானந்தர் டவுன் ஹால்' என்கிற இடமே அது!

இட்டன அள்ளியில் கிடைத்த நடுகல் ஒரு வீரன் பாய்கின்ற காட்டுப்பன்றியுடன் போரிட்டு அதனைக் கொன்று தானும் இறக்கிறான். அவனின் வீரத்தைப் போற்றி எடுக்கப்பட்ட நடுகல்லே பன்றிகுத்தி பட்டான் கல் ஆகும்.

பூசாரியும் போர் புரிந்தான் என்பதைப் போச்சம் பள்ளியில் கிடைத்த நடுகல் நமக்குக் காட்டுகிறது. அதில் வீரனின் வலக் கையில் வாளும், இடக் கையில் கோயில் மணியும் உள்ளது. அருகில் கரகம் ஒன்றும் வடிக்கப்பட்டுள்ளது. அதன்னால் மதப் பூசல் ஏற்பட்டு நடந்த போரில் பூசாரிகளும் கலந்துகொண்டு போரிட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

'காதல் கணவனொடு கனைஎரி மூழ்கும்
மாதர் மெல்லியல் மரபுரைத் தன்று'

-என்ற புறப்பொருள் வெண்பாமாலைக்குச் சான்றாக தருமபுரியில் காமாட்சியம்மன் தெருவிலுள்ள கோயிலொன்று தீபாஞ்சியம்மன் என்னும் பெயரில் அழைக்கப்படுகிறது. இதனால் கற்புத் தெய்வமாகக் கணவன் இறந்த பின் உயிர் வாழாது தீயில் தன்னை மாய்த்துக் கொண்ட பெண்ணின் நினைவாகக் கல்நட்டு வழிபட்டு வருவதை அறியமுடிகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளது போன்ற ஏராளமான நடுகற்கள் தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இத்தகு நடுகற்களினால் தகடூர் நாட்டின் வரலாற்றை மட்டுமன்றித் தமிழ்நாட்டின் வரலாற்றையே அறிய முடிகிறது. வீரத்தின் விளை நிலம் தகடூர் என்பது தெளிவாகிறது.

தகடூர் மாவட்ட வரலாற்றுப் பேரவையின் வாயிலாய், பல அரிய நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டு, தருமபுரியில் அமைக்கப்பட்டுள்ள அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. வரலாற்றுப் பேரவையால் அமைக்கப்பட்ட காட்சியகம் தற்பொழுது தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையால் ஏற்கப்பட்டு சிறப்பான வகையில் கல்வெட்டுகளைப் பாதுகாத்து வருகிறது. இந்த அருங்காட்சியகம் தருமபுரி பேருந்து நிலையத்தின் அருகில் கிருட்டிணகிரி செல்லும் நான்கு சாலை சந்திப்பில் அமைந்துள்ளது.

**குறிப்பு**

இக்கட்டுரை எழுதுவதற்குத் துணைபுரிந்தவை தொல்பொருள் ஆய்வுத்துறை மேனாள் இயக்குநர் திரு இரா. நாகசாமி, இந்நாள் இயக்குநர் திரு நடன. காசிநாதன் ஆகியோர்எழுதிய தகடூர் நடுகற்கள் பற்றிய கட்டுரை, 1979 மே - திங்களில் தருமபுரியில் நடைபெற்ற கல்வெட்டுப் பயிற்சியில் தொல்பொருள் ஆய்வாளர்கள் நிகழ்த்திய சொற்பொழிவுக் குறிப்புகள், தருமபுரி மாவட்ட அரும்பொருட்காட்சியகத் திறப்பு விழா மலர் 1979.

Phone No. 2363, 2841, 3524

With
Best
Compliments
From

# KARTHIK AGENCIES

Distribution for Bharat Gas of
BHARAT PETROLIUM CORPORATION LTD.,
Bharat Gas for Modern Cooking.

# முதல்வர் பிறந்த நாளையொட்டி 786 கைதிகள் விடுதலை!

## சிறைவாசிகள் மனம் திருந்தி மறுவாழ்வு பெற முதல்வர் ஆர்வம்!

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் புதிய அரசு அமைக்கப்பட்டு நல்லாட்சி நடைபெற்று வருவதை வரவேற்றும் மற்றும் அவர்களுடைய பிறந்த நாளை முன்னிட்டும் 1992-ஆம் ஆண்டு நல்லெண்ணம் மற்றும் மனித நேயத்தின் பேரில் 242 சிறைவாசிகளுக்கு முன் விடுதலையும், 713 சிறைவாசிகளுக்குத் தண்டனைக் குறைப்பும் வழங்கியதன் அடிப்படையில், இந்த ஆண்டும் கருணை காட்டி தண்டனைக் குறைப்பு வழங்கி பொது மன்னிப்பு அடிப்படையில் தங்களை முன் விடுதலை செய்யுமாறு கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிறைவாசிகள் மனம் திருந்தி மறுவாழ்வு பெற வேண்டுமென்பதில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கைதிகளுடைய கோரிக்கையை மனித நேயத்தோடு ஆய்வு செய்ய ஆணையிட்டுள்ளார். அதற்கிணங்க, 18.12.78 அன்று அல்லது அதற்குப் பின்னரோ ஆயுள் தண்டனை பெற்ற 12 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத் தண்டனை அனுபவித்த ஆண் ஆயுள் கைதிகளை மன்னித்து முன் விடுதலை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது. 18.12.78-க்குப் பின் ஆயுள் தண்டனை பெற்று 10 ஆண்டுகள் முழுமையாகச் சிறைத் தண்டனை அனுபவித்த பெண் கைதிகளையும் மன்னித்து முன் விடுதலை செய்யவும் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், கொலை, களவு, கள்ளக்கடத்தல் போன்ற குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்களைத் தவிர்த்து, ஏனைய குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் பெண் கைதிகளுக்கு முழு தண்டனைக் குறைப்பும், ஆண் கைதிகளுக்கு 6 மாதச் சிறைத் தண்டனைக் குறைப்பும் வழங்குமாறும் ஆணையிடப்பட்டுள்ளது.

இதனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாளான 24.2.1993 அன்று இரண்டு பெண் கைதிகள் உட்பட 134 ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள், விடுதலை ஆனார்கள்.

ஆயுள் தண்டனையைத் தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 23 பெண் கைதிகளும் இந்நாளில் விடுதலை ஆனார்கள். ஆயுள் தண்டனையைத் தவிர்த்து மற்ற தண்டனை பெற்றுள்ள 629 ஆண் கைதிகளும் தண்டனைக் குறைப்பு பெற்று விடுதலை ஆனார்கள். பயனடைந்த சிறைவாசிகளின் மொத்த எண்ணிக்கை 786.

டாக்டர் புரட்சித்தலைவியின் கருணை உள்ளத்தைப் பாராட்டி, பயன்பெறும் சிறைவாசிகள் மனம் திருந்தி மறுவாழ்வு பெற்று புதிய வாழ்க்கையினைத் தொடங்குவார்கள் என அரசு விழைகிறது.

## சரியான தமிழ்ச் சொற்கள்

Absentee landlord - செல்லா நிலக்கிழார்
Active service - செயற்படு பணி
Advantage - ஆ பயன்
Adviser to the Governor - ஆளுநரின் ஆய்ந்துரைஞர்
Agenda - நிகழ்ச்சிப் பட்டியல்
Agreeable diet - மாறுபாடில்லா உண்டி
Air-condition - வளிச்சீர்மை (A/C. வ/சீ.)
Alarm time-piece - எழுப்பு மணிப்பொறி
Amity - நல்லுறவு
Antenna - கவர்கம்பி
Artisan plot - அளவு மனை
Aspiration - உயர்வுள்ளல்
Assessment - மதிப்பீடு, வரிவிதிப்பு
Assignment - உரிமையளிப்பு, குறித்தளிப்பு, நல்குபணி
Attention - நிமிர்ந்து நில்
Auto - தானி
Autograph - வாழ்த்தொப்பம்
Avenue - அளாவம், நிழற்சாலை
Balcony - காண்பு மாடம்
Banner - பெயர்ச்சீலை
Bill of lading - கலச் சரக்கேற்றுச் சீட்டு
Block - படக்கட்டை
Blood pressure - குருதி அழுத்தம்
Bonus - பூரிப்பு ஊதியம்
Brain wash - உரையேற்றுதல்
Brief case - குறும் பேழை

—நன்றி: 'ஆட்சி மொழி அருஞ்சொற்கள்'

**TNPSC**

**விளம்பர எண். 8/93**

தமிழ்நாடு பொதுப்பணியில் சமூகநலத்துறையில் 18 சிறார் மேம்பாடு திட்ட அலுவலர்/வட்ட திட்ட ஊட்டச்சத்து அலுவலர்/சிறப்பு அலுவலர் (பங்க் ஸ்டால்) (Child Development Project Officer/Taluk Project Nutrition Officer/Special Officer (Bunk Stall) பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் பெண் வேட்பாளர்களிடமிருந்து மட்டும் 22.3.1993 அன்று மாலை 5.45 வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1820-60-2300-75-3200

ஒதுக்கீடு:

| | | |
|---|---|---|
| ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | : | 3 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | : | 3 |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ.) | : | 5 |
| பகிரங்கப் போட்டி | : | 7 |

**குறிப்பு:** இப்பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளைப் பெற்றிருந்து, குறைந்தபட்ச மதிப்பெண்களைப் பெறுவதன் மூலம் தெரிவுக்குத் தகுதியானவராகக் கருதப்படும் ஆதரவற்ற விதவைகள், அவரைவிட அதிக மதிப்பெண்களைப் பெற்றிருப்பவர்களைக் காட்டிலும் முன்னுரிமை வழங்கப்பட்டு தெரிவு செய்யப்படுவார்கள்.

**விளக்கம்:** 'ஆதரவற்ற விதவை' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும், பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

**வயது:** 1.7.1993 அன்று 30 வயதிற்குக் குறைவாக.

**குறிப்பு:** ஆதிதிராவிட வகுப்பினர், பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை.

(சலுகைகள் பற்றிய மேலும் சில விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.)

**தகுதி:** (15.2.1993 அன்றுள்ளபடி): கீழ்க்காண்பவை அல்லது அவைகளுக்கு இணையானவை:

A degree in Nutrition or Home Science

or

A degree with a Post Graduate Diploma in Rural Services awarded by the Gandhigram University.

ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு அளிக்கப்படும் விண்ணப்பக் கட்டணச் சலுகைகளும் தேர்வாணையத்தின் 'பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு - செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.2.93 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10), சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) ஏதாவதொரு கிளையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.2.1993 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில், செலுத்தத்தக்க - பத்து ரூபாய்க்கான (ரூ.10-) 'கேட்புக் காசோலை' (Demand Draft)-யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/265/MS/93



# எரிபொருள் சிக்கனத்திற்கு ஏற்ற முறை

கற்களைக் கொண்டு நெருப்பு உண்டாக்கிய மனிதன் பிறகு வீட்டு எரிபொருளுக்கு இயற்கை வளமான மரங்களைப் பயன்படுத்தினான். பிறகு மண்ணெண்ணையும் தொடர்ந்து எரிவாயுவும் பயன்படுத்தப்பட்டது. திரவப்படுத்தப்பட்ட பெட்ரோலிய வாயு சிலிண்டர்களில் அழுத்தத்தில் நிரப்பப்பட்டு சமையலுக்கு 'எரிவாயு'வாகப் பயன்படுத்தப்படுகின்றது. நகரத்தின் வாழ்க்கை முறையும் கிராம வாழ்க்கை முறையும் பெரிதும் வேறுபடுகின்றன. இன்றும் கிராம மக்கள் மரத்தை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத்துகின்றனர். இந்நிலையில்தான் 'சாண எரிவாயு' முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

உயிரினக் கழிவுப்பொருளில் இருந்து எரிசக்தி உற்பத்தி செய்வது மாற்று முறையாக உருவாக்கப்பட்டது. மாட்டுச் சாணம் கிராமங்களில் எருவாகப் பயன்படுத்தப்படுகின்றது. கிடைக்கும் மொத்தச் சாணத்தில் கால்பகுதி அளவுதான் எருவாக்கப்படுகின்றது. மற்றொரு பகுதி எருவாட்டியாக எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதே சாணத்தைச் சாண எரிவாயு முறையில் பயன்படுத்தினால் கூடுதல் எரிசக்தி கிடைக்கும்.

இந்தியாவில் ஓராண்டு கிடைக்கும் மாட்டுச் சாண அளவு 1,335 மில்லியன் டன் ஆகும். இதில் 265 மில்லியன் டன் சாணம் நேரடி எரிபொருளாகப் பயன்படுத்தப்படுகின்றது. மொத்த சாணமும் எரிவாயு முறைப்படி பயன்படுத்தப்பட்டால், ஓராண்டுக்கு 22,425 மில்லியன் லிட்டர் மண்ணெண்ணெய் சேமிக்கப்பட வாய்ப்புள்ளது.

இந்தியாவில் 1939-இல் சாணத்தை எரிவாயு முறையில் பயன்படுத்தும் செயல் திட்டம் தொடங்கப்பெற்றது. 1961-இல் உத்திரப்பிரதேசத்தில் கோபர் வாயு ஆராய்ச்சி நிலையம் தொடங்கப்பெற்றது. 1971-இல் ஆயிரக்கணக்கான சாண எரிவாயு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. 1974-75-இல் கதர் மற்றும்கிராமத் தொழில்கள் கமிஷன் 10,000 சாண எரிவாயு அமைப்புகளை உருவாக்கியது.

1981-82-இல் குடும்ப உபயோகச் சாண எரிவாயு முறையைப் பரவலாக்க ''உயிரினக் கழிவு வாயு அபிவிருத்திக்கான தேசிய செயல் திட்டம்'' தொடங்கப்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் 1981-82 முதல் 1990-91 வரை 14.03 இலட்சம் கிராமக் குடும்பங்கள் கொண்டுவரப்பட்டன.

1991-92-இல் ரூ.64 கோடி பட்ஜெட் மதிப்பீட்டில் 1,47,000 சாண எரிவாயு அமைப்புகளை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. சாண எரிவாயு அமைப்பை உருவாக்க அரசு மானியம் வழங்குகின்றது. ரூ.1700 முதல் ரூ.7300 வரை எரிவாயு அமைப்பின் அளவு, எந்த மாநிலம், பொருளாதார நிலை முதலான அடிப்படைகளைப் பொறுத்து மானியமாக வழங்கப்படுகின்றது.

1991-92-இல் தமிழ்நாட்டுக்கான சாண எரிவாயு அமைப்பை உருவாக்கும் இலக்காக 8000 நிர்ணயிக்கப்பட்டது. ஏப்ரல் - டிசம்பர் 91 வரையான காலத்துக்கான இலக்கு 4000 ஆகும். இது முழு அளவில் நிர்மாணிக்கப்பட்டு விட்டது.

**Phone: 2365**



Best Compliments From

# SRI ANJANEYA BLUE METAL

**87/25 Krishnapuram Village**
**K. Pethathalapalli**
**Krishnagiri**
**Dharmapuri District**

**Prop: M. KARTHIKEYAN**

கோயம்புத்தூர் உட்பட 13 இடங்களில் வட்டார உயிரினக் கழிவு எரிவாயு அபிவிருத்தி மற்றும் பயிற்சி மையங்கள் உள்ளன. ஒட்டு மொத்தத் தொழில் நுட்பம், பயிற்சி, விளம்பரம் ஆகியவற்றை இந்த வட்டார மையங்கள் மாநில அரசின் துறைகளுக்கு வழங்குகின்றன.

இதுவரையிலான எரிவாயுக் கலங்கள் எரிவாயு தயாரிக்க மட்டுமே பயன்பட்டன. எரிவாயுவின் கழிவுகள் பயனற்றவையாக ஒதுக்கப்பட்டன. ஆனால், தற்பொழுது சாண எரிவாயுக் கலத்தில் இருந்து வரும் கழிவானது நல்ல உரச் சத்தைக் கொண்டுள்ளது. இரசாயன உரங்களுக்கு இந்தக் கழிவை உபயோகப்படுத்தலாம். சாணத்தில் எந்த அளவு உரச்சத்து உள்ளதோ அதே அளவு உரச்சத்து கழிவிலும் உள்ளது. நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் அளவுகள் கழிவிலும் அப்படியே திரும்பக் கிடைக்கின்றன. அம்மோனியா நைட்ரஜன் என்னும் உரச்சத்து 70 சதவிகிதம் வரை கூடுதல் அடைகின்றது.

சாண எரிவாயுக் கலத்தில் இருந்து வரும் கழிவை நீரில் சரியான அளவில் கரைத்து அதில் பாசி வகைகளை வளர்க்கலாம். இதனால் நுண்ணுயிர்கள் பெருக்கமடைந்து நீரில் வாழும் மற்ற உயிர்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி மீன்களின் உயிரி உணவாகிய டாஃப்னியா சிமிலிஸ் என்பதை வளர்க்கலாம். கழிவு நீரில் இந்த உயிரி 30-38 நாட்களில் 478-691 வரை பெருகுகின்றது. மேலும் இந்நீரில் இருந்து லெம்னா என்னும் நீரில் மிதக்கும் செடிகளை வளர்த்து அதன்மூலம் உயிர்க்கூளம் தயாரிக்க முடியும். உயிர்க்கூளம் புரதச்சத்து மிக்கதாக இருப்பதால் அதை மீன் உணவாகவும் பயன்படுத்தப்படலாம்.

பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அளவு - தேவையை நிறைவு செய்யும் வகையில் இல்லை. எனவே, வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் மாற்றுச் சக்தி, மாற்று எரிபொருள் பயன்படுத்துவது இன்றியமையாத் தேவையாகும்.

—என். ரெங்கநாதன்

• சில இடங்களில் நான் வாழ்த்தப்படுகிறேன்; சில இடங்களில் வசைகளைப் பெறுகிறேன். வசையால் நான் தாழ்ந்துவிடப் போவதில்லை; வாழ்த்தால் நான் உயர்ந்துவிடப் போவதுமில்லை; காரணம்- இறைவனிடம் உண்மையாக நடக்கிற நான் எவருக்கும் அஞ்சத் தேவையில்லை.

—காந்தியடிகள்

# தமிழ்நாடு மின்சார வாரியம்

## டெண்டர் அறிவிப்பு - COAL-10

தமிழ்நாடு மின்சார வாரியம் சார்பில் அதற்காக, கீழ்க்கண்டவற்றை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட டெண்டர்கள் இரண்டு பகுதி டெண்டர் முறையின் கீழ், நிர்ணயிக்கப்பட்ட முடிவு தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழே கையொப்பமிட்டவரை வந்தடையும்படி வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பொருட்கள் பற்றிய விபரம் | : | இரண்டு மில்லியன் மெட்ரிக் டன் இறக்குமதி செய்யப்பட்ட நீராவி நிலக்கரி (Steaming Coal) |
| விவரக் குறிப்பிடுகை எண் | : | COAL-10 DATED 12.2.1993 |
| விவரக் குறிப்பிடுகை கட்டணம் | : | A-தமிழ்நாட்டில் அமைந்துள்ள யூனிட்டுகளுக்கு<br>1. ரூ.1,000 நேரில் பெறுவதற்கு<br>2. ரூ.1,050 இந்தியாவிற்குள் தபால் மூலம் பெறுவதற்கு<br>B-தமிழ்நாட்டிற்கு வெளியே அமைந்துள்ள யூனிட்டுகளுக்கு<br>1. ரூ.1,000 நேரில் பெறுவதற்கு<br>2. ரூ.1,150 (CST ரூ.100 உட்பட) இந்தியாவிற்குள் தபால் மூலம் பெறுவதற்கு. |
| டேவணி டெப்பாஸிட் தொகை | : | ரூபாய் ஒரு கோடி மட்டும். |
| டெண்டர் பெற்றுக் கொள்வதற்கான முடிவு தேதி மற்றும் நேரம் | : | 10.3.93 அன்று 14.00 மணி |
| டெண்டர் திறப்பு நேரம் | : | 10.3.93 அன்று 14.00 மணி. |
| டெண்டர் திறக்கும் இடம் | : | இயக்குநர்/நிலக்கரி (COAL)<br>2-வது தளம், கே.ஆர்.ஆர். மாளிகை,<br>மேற்குப் பிரிவு, 800, அண்ணாசாலை,<br>மின்சார அவின்யூ,<br>சென்னை-600 002 |

விவரக் குறிப்பிடுகையின் நகலை, கட்டணத்தை ரொக்கம் அல்லது மணி ஆர்டர் மூலம் தலைமை உள் தணிக்கை அலுவலர், தமிழ்நாடு மின்சார வாரியம் முதல் தளம், கே.ஆர்.ஆர். மாளிகை, 800, அண்ணா சாலை, சென்னை-600 002 அவர்களுக்கு செலுத்தி, விவரக் குறிப்பிடுகை எண்ணைக் குறிப்பிட்டு, விஷயத்தைப் பொறுத்து ரொக்க ரசீது அல்லது மணி ஆர்டர் ரசீதை இயக்குநர்/நிலக்கரி, இரண்டாவது தளம், மேற்குப் பிரிவு, கே.ஆர்.ஆர். மாளிகை, 800, அண்ணா சாலை, சென்னை- 600 002 அவர்களுக்கு அனுப்பி, அத்துடன் முழு அஞ்சல் முகவரியையும் குறிப்பிட்டு, வேண்டுதல் மனு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். டெண்டர்கள் மூன்று நகல்களில் கீழ்க் கையொப்பமிட்டவருக்குக் குறிப்பிடப்பட்ட முடிவுத் தேதி மற்றும் நேரத்திற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விவரக் குறிப்பிடுகை இயக்குநர்/நிலக்கரி, 2-வது தளம், மேற்குப் பிரிவு, கே.ஆர்.ஆர். மாளிகை, மின்சார அவின்யூ, 800, அண்ணாசாலை, சென்னை-600 002 அவர்கள் அலுவலகத்தில் 19.2.1993 முதல் 9.3.1993 வரை எல்லா வேலை நாட்களிலும் காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பரிசீலனை செய்யப்படும்.

முடிவு தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு பெறப்படும் டெண்டர்கள் பரிபூரணமாக நிராகரிக்கப்படும். தபால் மூலம் ஏற்படும் விவரக் குறிப்பிடுகை நகலின் இழப்பு மற்றும் காலத் தாமதத்திற்கு வாரியம் பொறுப்பு ஏற்காது. முடிவுத் தேதிக்குப் பிறகு கால நீடிப்பு அனுமதிக்கப்படமாட்டாது.

விவரக் குறிப்பிடுகையின் நகல்கள் 19.2.1993 முதல் விற்பனைக்குக் கிடைக்கும்.

டெண்டர்கள் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் தேதி அன்று விவரக்குறிப்பிடுகையின் நகல் விற்பனைக்கு வழங்கப்படமாட்டாது.

**தலைமைப் பொறியாளர் (எந்திரவியல்/நிலக்கரி)**

2-வது தளம், மேற்குப் பிரிவு,
800, அண்ணா சாலை NPKRR மாளிகை
சென்னை-600 002
டெலக்ஸ்: 041-7261; பேக்ஸ்: 91-044-831210.

DIPR/233/MS/93.

## தருமபுரி மாவட்டச் சிறப்பு மலர் வெளியிட்ட 'தமிழரசு'க்கு வாழ்த்துக்கள்

1. பழநியப்பா தியேட்டர், பி.துரிஞ்சிப்பட்டி, போன்: 439.
2. ஸ்ரீ பழநியப்பா சேகோபேக்டரி, செம்பியானூர், போன்: 429.
3. செம்பியானூர் 55-ஏக்கர் ''தென்னந்தோப்பு''- கார்டன்.
4. அஜ்ஜம்பட்டி ''மாந்தோப்பு''- கார்டன்.
5. ஸ்ரீபழநியப்பா லாரி சர்வீஸ்.
6. ஏ.எம்.ஜி. ஸ்கூல் - பொம்மிடி, போன்: 477.

**பி. கோவிந்தகவுண்டர் அண்டு சன்ஸ்**
உரிமையாளர்
செம்பியானூர், பி.துரிஞ்சிப்பட்டி - (போஸ்ட்)
அரூர் (தாலுக்கா), தருமபுரி (மாவட்டம்).

**திருமகள் பெட்ரோலியம் ஏஜன்ஸீஸ்,** ஊத்தங்கரை.
**திருமகள் டிரான்ஸ்போர்ட்,** ஊத்தங்கரை.
**திருமகள் அக்ரோ சர்வீஸ்,** ஊத்தங்கரை.
**திருமகள் ஸ்டோர்ஸ்,** ஊத்தங்கரை.
உரிமையாளர்
**திரு. ஆர். பாலசுப்ரமணியம்**
ஊத்தங்கரை.



**அரிமா. அ. பழனியப்பன்**
மாவட்ட இணைச் செயலாளர், திராவிடர் கழகம்
உரிமை: இராசா மருந்தகம்
ஊத்தங்கரை
இயக்குனர்:
**சதர்ன்சால்வெண்ட் எக்ஸ்டென்ஸன் (பி) லிட்.**
காலிப்பேட்டை, அரூர் வட்டம்,
தருமபுரி மாவட்டம்.

**பழனியாண்டவர் ஜின்னிங் பேக்டரி**
**சரவணா அண்டு கமிஷன் மண்டி**
ஓமலூர் ரோடு, கொங்கனாபுரம், சேலம் மாவட்டம்.
உரிமையாளர்:
என். இராமக் கவுண்டர்
என். செங்கோட கவுண்டர்

**சி.ஏ.கே. பெட்ரோலியம் ஏஜன்ஸீஸ்,** திருவண்ணாமலை ரோடு, ஊத்தங்கரை.
உரிமையாளர்:
எம். சந்திரசேகரன், பி.ஏ. ஊத்தங்கரை.

**டாக்டர் தே. செங்குட்டுவன்**
டி.பி.ஜி. மருத்துவமனை
கன்னாண்ட அள்ளி

**சிவலிங்கம் ரெட்டியார் மளிகை ஸ்டோர்ஸ்**
ஊத்தங்கரை

# எண்ணெய்ப் பனை

## தமிழ்நாட்டின் காமதேனு

- எஸ். சுப்பிரமணியன்



**பா**ரம்பரியமாக வேர்க்கடலையைப் பயிரிட்டு வரும் தமிழ்நாடு, தற்போது மிகப்பெரிய அளவில் எண்ணெய்ப் பனை சாகுபடியை மேற்கொண்டு உள்ளது. எண்ணெய்ப் பனையைச் சாகுபடி செய்வதற்கேற்ற பகுதி காவிரிப்படுகை என்று கண்டறியப்பட்டுள்ளது. நிலையான நீர்ப்பாசன வசதியும், ஆண்டிற்கு 2,000 மி.மீ. மழை அளவும் இப்பகுதியில்தான் கிடைக்கிறது.

அடுத்த இரண்டாண்டுகளில், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் காவிரிப் பாசனப் பகுதியில் உள்ள 25,000 எக்டேர் நிலப்பரப்பில் மத்திய அரசின் விரிவாக்கப் பகுதித் திட்டத்தின்கீழ், எண்ணெய்ப் பனைச் சாகுபடி மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்க, தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ரூ.1.30 கோடியை ஒதுக்கியுள்ளது.

இத்திட்டத்தின்படி 3.4 இலட்சம் எண்ணெய்ப் பனை வித்துக்கள் லத்தீன் அமெரிக்க நாடான கோஸ்டாரிகாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றின் சராசரி விலை ரூ.15 (0.45 அமெரிக்க டாலர்) ஆகும். மூன்று கப்பல்களின் மூலம் ஏற்கெனவே இவை பெறப்பட்டு விட்டன.

தமிழ்நாட்டிற்கு இன்னும் இரண்டு கப்பல்களில் கோஸ்டாரிகாவிலிருந்து பெறப்பட உள்ளன. எல்லா எண்ணெய்ப் பனை வித்துக்களும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சாக்கோட்டை விதைப் பண்ணையிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள இனுன்குர் விதைப் பண்ணையிலும் நடப்பட்டுள்ளன.

தொடக்கத்தில் இவை ஒவ்வொன்றும் தனி பாலிதீன் பைகளின் மூலம் 15 மாதங்களுக்கு வளர்க்கப்படும். தெளிப்பு நீர்ப்பாசன முறை மூலம் இவை பராமரிக்கப்படும். மொத்தம் 15 முதல் 18 மாதங்களுக்குப் பிறகு ஒவ்வொரு செம்பனைக் கன்றும் தனித்தனியாக நடப்படும். அப்போது இதனுடைய சராசரி விலை ரூ.35 முதல் 45 வரை இருக்கும்.

இவை திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள உழவர்களுக்கு மானிய விலையில் அளிக்கப்படும். நான்கு ஆண்டுக் காலப் பயிரான செம்பனை, தமிழ்நாட்டில் வரும் 1995-ஆம் ஆண்டு முதல் எண்ணெய் உற்பத்தி செய்யும்.

எண்ணெய்ப் பனைச் சாகுபடியில் ஈடுபடும் அனைவரும், திருச்சி, தஞ்சாவூர் காவிரிப்படுகையில் அமைய உள்ள பாமாயில் பிழியும் ஆலையில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவார்கள். இந்த ஆலை எண்ணெய்ப் பனைச் சாகுபடியாளர்களிடமிருந்து செம்பனைக் கொப்பரைகளையும், பழங்களையும் கொள்முதல் செய்யும். பாமாயில் உற்பத்தி மற்றும் விற்பனையை இவ்வாலையே மேற்கொள்ளும். சர்க்கரை ஆலைகள் கரும்புச் சாகுபடியாளர்களின் நலனைப் பாதுகாப்பது போன்று, இந்த ஆலை எண்ணெய்ப் பனைச் சாகுபடியாளர்களின் நலனையும் பாதுகாக்கும். இவ்வாலை அடுத்த ஆண்டிற்குள் இயங்கத் தொடங்கும்.

தமிழ்நாடு அரசு, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டையில் ரூ.10 இலட்சம் செலவில் முன்னோடி எண்ணெய்ப் பனைச் சாகுபடித் திட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. திருவனந்தபுரத்தில் உள்ள மத்திய எண்ணெய்ப் பனை நிலையத்தில் இருந்து 40,000 செம்பனைக் கன்றுகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. இதே நிலையத்தில் இருந்து மேற்கொண்டு 40,000 கன்றுகளை அளிக்க புதுதில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுவின் தலைமை இயக்குனரகம் ஒப்புக்கொண்டுள்ளது. எண்ணெய்ப் பனைச் சாகுபடி குறித்து ஒன்பது தமிழக வேளாண்

அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கேரளாவிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் உள்ள எண்ணெய்ப் பனை ஆராய்ச்சி நிலையங்களில் இவர்கள் இப்பயிற்சியைப் பெற்றனர்.

**எண்ணெய்ப் பனைக்கு எட்டாவது திட்ட கால ஒதுக்கீடு**

கேரளா, அந்தமான் நிக்கோபார் தீவுகள், மகாராஷ்டிராவின் கொங்கனப்பகுதி, கர்நாடகாவின் ஷிமோகா மாவட்டம், ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டம் ஆகியவை எண்ணெய்ப் பனைச் சாகுபடி செய்வதற்கேற்ற இதரப் பகுதிகளாகும். எண்ணெய்ப் பனைச் சாகுபடியை ஊக்குவிக்க எட்டாவது திட்ட காலத்தில் ரூ.94 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி 80,000 எக்டேர் நிலப்பரப்பில் எண்ணெய்ப் பனைச் சாகுபடி செய்யப்படும். நாட்டில் எண்ணெய்ப் பனைச் சாகுபடிக்கான ஒளிமயமான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டால், எட்டாவது திட்ட காலத்தில் நாட்டின் மொத்த எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 2.3 கோடி டன் இலக்கையும் மிஞ்சுமென எதிர்பார்க்கப்படுகிறது.



**பணப் பயிர்**

மற்ற எண்ணெய் வித்துக்களை விட எண்ணெய்ப் பனையிலிருந்து அதிகமான சமையல் எண்ணெய் கிடைக்கிறது. எண்ணெய்ப் பனைச் சாகுபடியின் மூலம் ஒரு எக்டேரில் மூன்று முதல் ஏழு டன் வரை எண்ணெய் பெறலாம். ஆனால், இந்தியாவில் பயிரிடப்படும் இதர எண்ணெய் வித்துக்களான வேர்க்கடலை, எள், கடுகு, ஆளிவிதை போன்றவற்றிலிருந்து சராசரியாக 670 கிலோ கிராம் எண்ணெயே பெறப்படுகிறது. எண்ணெய்ப் பனையின் ஆயுட்காலம் நூறு ஆண்டுகளுக்கும் அதிகமாகும். முதல் நான்கு ஆண்டுகள் கழித்து தொடர்ந்து எண்ணெய் உற்பத்தி செய்யும் செம்பனை, சாகுபடியாளர்களுக்குக் காமதேனு போன்றதொரு வரப்பிரசாதமாக விளங்கும்.

**எண்ணெய் பிழிதல்**

செம்பனைப் பழத்திலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கப்பட்ட பின், எஞ்சியுள்ள சக்கை கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தப்படுகிறது. செம்பனை எண்ணெயிலிருந்து பிரித்தெடுக்கப்படும் திரவத்தை இதர சமையல் எண்ணெயுடன் சேர்க்கலாம். எண்ணெய்ப் பனை வித்துக்களிலிருந்து சமையல் எண்ணெயைப் பிழிந்தெடுக்கப்பட்டபின் கிடைக்கும் ஒருவகை எண்ணெயைச் சோப்பு தயாரிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம். செம்பனைப் பழங்களையும், கொட்டைகளையும் அறுவடை செய்த 24 மணி நேரத்திற்குள் எண்ணெய் பிரித்தெடுத்து விட வேண்டுமென்பதால், எண்ணெய்ப் பனைச் சாகுபடி பகுதியிலேயே எண்ணெய் பிழியும் ஆலை அமைக்கப்பட வேண்டும்.

## ஆந்தையாரின் சேவை!



**ஆந்தை என்றவுடன் நமக்கு நினைவுக்கு வருவது திரைப்படங்களில் திகிலூட்டும் காட்சிகளில் பின்னணி இசையில் இதன் அலறலும், கெட்ட சகுனமாய் கருதுவதும் தான். ஆந்தையாரின் அமைதியான சேவையை அறிந்த பின்னர் உங்கள் எண்ணம் மாறக்கூடும்.**

**பெரிய ஆந்தைகளின் முக்கிய உணவு எலி, சுண்டெலி. ஓர் இரவில் குறைந்தது இரண்டு அல்லது மூன்று எலிகளை ஆந்தை தனது இரைப்பைக்கு இரையாக்குகிறது. இரண்டு எலிகளைக் கொள்வதானது 880 எலிகளின் பிறப்பைத் தடுப்பதற்கு ஒப்பாகும். அப்படியானால் ஆண்டின் 365 இரவுகளிலும் வேலை நிறுத்தமோ சம்பளத்துடன் கூடிய விடுப்போ இன்றி ஒரு ஆந்தையல்ல, ஊரிலுள்ள அத்தனை ஆந்தைகளும் செய்யும் சேவையானது...!**

**ஆந்தையாரின் இந்த அமைதியான அரிய சேவையை இவ்வாறு நகைச்சுவையுடன் குறிப்பிட்டுள்ளார் பறவை ஆராய்ச்சியாளர் சலீம் அலி. அதனால்தானோ என்னவோ, இலட்சுமியின் வாகனமாக ஆந்தையார் வடநாட்டில் வழங்குகிறார்.**

**இனிமேலாவது ஆந்தையை அருவருப்புடன் ஒதுக்காமல் ஆதரிப்போமாக!**



# பார்த்தோம் படித்தோம்

**1.2.93** இதழில், 'ஆசிய விளை யாட்டரங்குகளின் அரசி' கட்டுரை சிறப்பாக இருந்தது. அது தொடர்பான செய்திகளும் படிக்கச் சுவையாக இருந்தன.

—வி.பி. செல்வராஜ்
கும்பகோணம்

'தமிழ்த் திரையுலகின் தங்க விழா' நிகழ்ச்சித் தொகுப்பு படித்தேன். நேரில் காண்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

—புஷ்பராஜ்
சென்னை-79.

தருமபுரி மாவட்டச் சிறப்புச் செய்திகள் பயனுள்ளவை- பாதுகாக்கப் பட வேண்டியவை.

—பொன். மறைமலைதாசன்
திருவள்ளூர்

'மாணவர் பக்கம்' அருமை. பள்ளி மாணவர்க்குப் பயன்தரும் பக்கம். பக்கத்தை அதிகப்படுத்துங்கள்.

—பி. சேகர்
ஆர்க்காடு

தமிழரசின் ஒவ்வொரு அட்டைப் படமும் கண்ணைக் கவரும் வண்ணம் அமைந்து வருகிறது. பாராட்டுக்கள்.

—சண்முகம்
பேரணாம்பட்டு

**தமிழ்த் திரையுலகின் தங்க விழா...**

'தமிழரசு' 1.2.93 இதழில் வெளி வந்த 'தமிழ்த் திரையுலகின் தங்க விழா' எனும் கட்டுரையில், 1990-ஆம் ஆண் டிற்கான சிறந்த கலை வித்தகர்களுக்கான விருதுகள் பெற்றவர்களில் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்றவர்களில் முதலாமவர் பெயரைக் கவிஞர் முத்துலிங்கம் என்று திருத்திப் படிக்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

## முதல்வர் பிறந்தநாள்!

## கைத்தறித் துணிகளுக்கு

## 20 சதவிகிதம்

## தள்ளுபடி!

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் 45-வது பிறந்தநாளை முன்னிட்டு, ஒரு வார காலம் கைத்தறித் துணி களுக்கு 20 சதவிகிதம் தள்ளுபடி வழங்கப்பட்டது.

சென்ற மாதம் 22-ந் தேதி முதல் 28-ந் தேதி வரை தமிழகத்திலுள்ள அனைத்துக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களில் கைத்தறித் துணிகளுக்குத் தள்ளுபடி வழங்கப்பட்டது.


With best compliments from

**UMA SHANKAR ENGINEERING WORKS**



**No.42/1, Rajeswari Nagar,
Govinda Agravaram,
Begepalli Post, Hosur-635 126.**

**V. SHAMLA**
**Proprietor**

**UMA SHANKAR LOOMS**

**57, A-Cross Road, (Muddappa Garden),
Dayanandanagar, Srirampuram,
Bangalore- 560 021. Phone: 350389**

With Best Compliments From:



**Thiru L. Selvaraj**

**Abirami Thirai Arankam**

**Shoolagiri**

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

**நெசவாளர்கள்**

**தங்கவேலு ஸ்பின்னிங்**

**மில்ஸ்**

**(பி) லிமிடெட்**

தருமபுரி மாவட்டம்



# தியாக தீபம் தில்லையாடி வள்ளியம்மை

-ரகமி

**1913-ஆம் ஆண்டு அக்டோபரில் தென்னாப்பிரிக்காவில் மகாத்மா காந்தியடிகள் தலைமையில் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்ற அத்தனைப் பெண்களுள் சிறுமி தில்லையாடி வள்ளியம்மையும் ஒருவளாவாள். சிறையில் கடும் சித்திரவதைகளுக்கு ஆளாகிய அச்சிறுமி விடுதலைக்குப் பின் உடல் நலன் தேறாமல் 1914-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-இல் தனது 16-ஆம் வயதில் காலமானாள். 'தியாக தீபம்' வள்ளியம்மையின் 80-வது நினைவு ஆண்டு நிறைவினையொட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது!**

''சூரியனே அஸ்தமிக்காத மாபெரும் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம்'' எனத் திக்கெட்டும் புகழ் பரப்பிய ஆங்கிலேயர்கள் தென்னாப்பிரிக்காவில், காலனி ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அதிகாரம் செய்து வந்தனர். தங்களிடம் வேலை செய்ய இந்தியாவிலிருந்து ஆட்களை அனுப்பும்படி, காலனி சொந்தக்காரர்கள் இந்திய அரசாங்கத்தினிடம் கேட்டனர். இதனால் இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாரும் தென்னிந்தியாவிலிருந்து பெருமளவில் ஆட்களை அனுப்பத் திட்டமிட்டனர். இந்தியரிடம் பிரிட்டிஷாரின் பெருமைகளை மிகைப்படுத்திக் கூறவும், இந்தியாவில் வாழ்வதைவிட வெளி நாடுகளிலுள்ள பிரிட்டிஷ் காலனிகளுக்குச் சென்றால், அங்கு மிகுந்த சம்பாத்தியம் பெறலாம் என நயவஞ்சகமாகப் பிரச்சாரங்கள் செய்யவும் தங்களுக்குச் சாதகமாகச் சில முகவர்களை நியமித்தனர். இவர்களுக்குக் 'கங்காணிகள்' என்று பெயர். கங்காணிகள் என்ற பதம் ஆரம்பத்தில் 'கேங்-கேனி' (Gang Canny சாமர்த்தியமாகப் பேசிக் கூட்டத்தைச் சேர்ப்பவன்) என்றிருந்தது. அதுவே கடைசியில் தமிழில் 'கேங்-காணி' அல்லது 'கங்காணி' என்றாயிற்று! இந்த 'கங்காணி'யின் வலைகளில் சிக்கிய ஆயிரக்கணக்கான இந்தியர்களை கப்பல்களில் ஆடு மாடுகளைப் போல் ஏற்றித் தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பினர்.

தென்னிந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கத்தின்கீழ் இருந்த, புதுச்சேரி டூப்ளேக்ஸ் தெருவில் வசித்து வந்தவர் ஆர். முனுசாமி முதலியார். இவர் நெசவுத் தொழிலாளி குடும்பத்தினர். தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகேயுள்ளது தில்லையாடி கிராமம். பிரபல தமிழ்க் கவிஞர் அருணாசலக் கவிராயர் பிறந்ததும் இங்குதான். இங்கு 'மங்களத்தம்மாள்' என்ற ஜானகி அம்மாள் செங்குந்தர் முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர். புதுவை முனுசாமி முதலியாருக்கும், தில்லையாடி மங்களத்தம்மாளுக்கும் திருமணம் நடந்தது. தம்பதியர் தில்லையாடியிலேயே வசித்துத் தங்களது நெசவுத் தொழிலையே செய்து வாழ்ந்து வந்தனர்.

இந்தியாவில் பிரிட்டிஷார் லங்காஷயரிலிருந்து ஆலைத் துணிகளை அதிக அளவில் இறக்குமதி செய்யவே, இங்கு கைத்தறித் துணிகளுக்கு 'மவுசும்' குறைந்தது. நெசவுத் தொழிலும் படுத்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய 'கங்காணிகள்' தங்களது வசீகர, பேச்சுத் தந்திரங்களினால் தென்னிந்திய நெசவுத் தொழிலாளர்களைத் திசைத் திருப்பினர். கங்காணிகள் பேச்சுகளில் மதிமயங்கிய பல்லாயிரக்கணக்கானவர்களில் முனுசாமி முதலியாரும் ஒருவராவார். பிழைப்பிற்காகத் தென்னாப்பிரிக்கா செல்பவர்களில் இவரும் ஒருவராவார். அப்போது இவருடைய மனைவி மங்களத்தம்மாள் கர்ப்பமாக இருக்கவே, முனுசாமி முதலியார் தன் மனைவியோடு 1898-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவுக்குக் கப்பலில் பயணமானார்.

தென்னாப்பிரிக்காவில் ஜோஹன்ஸ்பர்க்கில் குடியேறிய முனுசாமி முதலியார் ஆரம்பத்தில் சிறுகடையை வைத்து வாழ்ந்து வந்த சில மாதங்களுக்குள் மனைவி மங்களத்தம்மாளுக்கு அழகான

மண் மணக்கப் புகழ் குவித்த
சங்கத் தமிழ் முழக்கமிடும்
சாதனைகள் படைத்த
'தமிழரசு' இதழை
—வாழ்த்தும்—





B.C. இராமன்,
முன்னாள் பேரூராட்சித் தலைவர்,

ஸ்ரீ லக்ஷ்மி நாராயணா கிரானைட்ஸ்

B.C.R. ரப்பர் இண்டஸ்டிரீஸ்

B.R. மனோகரன்

ஜனதா எக்ஸ்போர்ட்
காரிமங்கலம் - 635 111
தருமபுரி (மாவட்டம்)

ஓர் பெண் குழந்தையும் பிறந்தது. தங்களது குலதெய்வம், மற்றும் அருணாசலக் கவிராயரின் தாயார் பெயருமாகிய 'வள்ளி' என்பதையே தங்களது குழந்தைக்கும் சூட்டினார். பின்னர் சிறுமி வள்ளியம்மை அங்குள்ள 'காலனி சர்க்கார் பெண்கள் மற்றும் ஆர்பன்ஸ் கான்வெண்டில்' சேர்ந்து படிக்கலானார். தென்னாப்பிரிக்காவுக்குப் பிழைக்கச் சென்ற இந்தியர்களுக்கு ஆங்கிலேயர்களால் கடும் துன்பங்கள் ஏற்பட்டன. இந்தியர்கள் அடிமைகள் என்றும், நிற வேற்றுமையைப் பெரிதும் கொண்டு இந்தியர்களைக் கசையடித்தல், காதறுத்தல், போன்ற கொடுமைகளுக்கு உள்ளாக்கினர். முக்கியமான பெண்களின் திருமணத்தைப் பற்றியே மிகுந்த சர்ச்சைகளை ஏற்படுத்தி, மிகவும் கேவலப்படுத்தினர். இதுவே அங்குள்ள இந்தியர்களுக்குள் பெரும் கிளர்ச்சியாக மூண்டு விட்டது.

தென்னாப்பிரிக்காவில் பாரிஸ்டராக உத்தியோகம் பார்த்து வந்த காந்தியடிகள், அங்கு இந்தியர்கள், குறிப்பாகப் பெண்கள் படும் துயரங்களை நேரிலேயே கண்டார். 1906-ஆம் ஆண்டு செப்டம்பர் 11-இல் ஜோஹன்ஸ்பார்க்கில் கூடிய மூவாயிரம் பேர்களுக்கு மேல் திரண்ட மாநாட்டில் காந்தியடிகள் அகிம்சா முறையில் போராட்டத்தைத் தொடங்கினார். இதுவே காந்தியடிகள் நடத்திய முதல் போராட்டமாகும். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் சார்பில் நடக்கும் கூட்டங்களுக்குப் பள்ளி மாணவி வள்ளியம்மை தன் தாயாருடன் செல்வாள். அப்போது அங்குள்ள தலைவர்கள் மற்றும் காந்தியடிகள் நிகழ்த்திய பல வீரச் சொற்பொழிவுகள் சிறுமி வள்ளியம்மையின் மனதிலும் ஆழப் பதிந்தன. சிறுமி வள்ளியம்மையும் பெரியோர்கள் நடத்தும் போராட்டங்களிலும் கலந்துகொள்ள முடிவு செய்தாள். தாயார் மற்றும் இதர பெரியோர்கள் எவ்வளவு புத்திமதிகளைக் கூறியும் வள்ளியம்மை அதனை ஏற்காமல் போராட்டத்தில் வெகு தீவிரமானாள்.

ஒரு சமயம் திடீரென ஜோஹன்ஸ்பர்க்கிலிருந்து ஓர் பெரும் மாதர்கள் அணி பிரிட்டிஷாரின் அநீதிகளைக் கண்டிக்கும் வகையில் நியூகாசில் வரையில் சென்று பேரணி ஊர்வலம் நடத்த தயாராயினர். 1913-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் வாரத்தில் ஜோஹன்ஸ்பார்க்கிலிருந்து புறப்பட்ட மாபெரும் மாதர் அணி ஊர்வலம் பிரிட்டிஷாரின் ஆட்சியை எதிர்த்து பலத்த கோஷங்களோடு சென்றனர். இதனைக் கண்ட ஆட்சியாளர்கள் எவ்வளவு தடுத்தாலும் தொடர்ந்து நாள் தவறாமல் ஊர்வலம் நியூகாசில் நோக்கியே சென்றது. அதே ஆண்டு டிசம்பர் 22-இல் 'வோல்கிஸ்ரஸ்ட்' என்ற இடத்தில் போலீசார் ஊர்வலத்தை பலாத்கார முறையில் தடுத்து நிறுத்தி அத்தனைப் பெண்களையும் கைது செய்து 'மாரிட்ஸ் பர்க்' சிறையில் கொண்டுபோய் அடைத்தனர். இதில் 16 வயதான சிறுமி தில்லையாடி வள்ளியம்மையும் ஒருவளாவாள்! அவர் சிறைத்தண்டனை அடைந்ததைப் பற்றிச் சிறிதும் கவலையேபட வில்லை.



ஜோஹன்ஸ்பார்க்கில் அண்ணல் காந்தியடிகள் தனிப்பட எடுத்துக்கொண்ட புகைப்படம்.

சிறுமி வள்ளியம்மையைச் சிறை அதிகாரிகள் மிகக் கொடுமையாக நடத்தினர். அச்சிறுமியால் செய்ய முடியாத அளவிற்கு அவளிடம் கடுமையாக வேலை வாங்கப்பட்டது. போதிய உணவோ, தண்ணீரோ அளிக்காமல் அவள் உண்ணும் உணவில் சிறுசிறு கற்களும், மணலும் கலந்த உணவையே அளித்தனர். சுகாதாரக் கேடுகள் நிறைந்த சிறையில் நரக வேதனையும் அடைந்தாள் அவள். இதனால் உடல் நலன் பாதிக்கப்பட்ட வள்ளியம்மைக்குப் போதிய மருத்துவச் சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பு, சிறையில் கொடுமைகளை அனுபவித்து நேர்மையோடு தனது வேலைகளைச் செய்து வந்ததனால் அதிகாரிகள் ஜெயில் சட்டப்படி சில நாட்களுக்கு முன்பாகவே 1914-ஆம் ஆண்டு பிப்ரவரி 11-ஆம் தேதியே வள்ளியம்மையை விடுதலை செய்தனர்.

சிறையிலிருந்து எலும்பும் தோலுமாக விடுதலையடைந்த வள்ளியம்மை உடல் நலமின்றி வீட்டிலேயே படுத்தபடுக்கையாக இருப்பதாக கேள்விப்பட்ட மகாத்மா காந்தியடிகள் அவளைக் காண அவளது இல்லத்திற்கே சென்றார். வீட்டில் அங்கோர் மூலையில் கட்டிலில் துணியோடு துணியாகி மெலிந்து படுத்திருக்கும் வள்ளியம்மையைக் கண்டதுமே காந்திஜி மிகுந்த கவலையோடு, "வள்ளியம்மா! நீ ஜெயிலுக்குச் சென்றதற்காக வருத்தப் படுகிறாயா?" என்றதற்குச் சிறுமி வள்ளியம்மை தனது இருகரங்களைக் குவித்து அவரை வணங்கியபடியே, 'பாரிஸ்டர் ஐயா! வருத்தமா? ஒரு துளியும் இல்லையே! இப்போதும்கூட இன்னொரு தடவையும் என்னைக் கைது செய்தாலும் நான் சிறைக்குச் செல்லத் தயார்!' என்றாள்.

"அப்படியா வள்ளியம்மா! மறுபடியும் சிறைக்குச் சென்று அதனால் நீ இறந்து போவதாக இருந்தால் என்ன செய்வாய்?"...

"பாரிஸ்டர் ஐயா! மரணமா?... அதை நான் பொருட்படுத்தவே மாட்டேன். தாய்நாட்டிற்காக உயிரைக் கொடுக்க விரும்பாதவர்கள் யாராவது இருப்பார்களா? நான் உயிரைக் கொடுக்கத் தயார்!" என்றதுமே மகாத்மா காந்திஜியே வியப்படைந்தார். வள்ளியம்மையின் தாய்நாட்டுப்பற்றுதலை பெரிதும் பாராட்டிய காந்திஜி, அவளது உடல் நலன் தேறவும் ஆசி கூறிச் சென்றார்.

பின்பு அடுத்த சில தினங்களுக்குள் சிறுமி வள்ளியம்மையின் உடல்நலன்

**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர்கள் சங்கம்**
அரூர் வட்டக்கிளை, தருமபுரி மாவட்டம்

Best Compliments

**M/s சதர்ன் டைல்ஸ் (பி) லிமிடெட்,**
கோம்பூர், மஞ்சவாடி
தருமபுரி

தமிழ்நாட்டில் முதன்முதலாக உற்பத்தி செய்யும் உயர்தரமான மேங்கலூர் ஓடுகள், மற்றும் ஒயர் கட் பிரிக்ஸ், மூலை ஓடுகள் மார்ச் மாதம் 1-ஆம் தேதி முதல் விற்பனைக்குத் தயாராக உள்ளது.

மேலாளர்

With the best compliments from:

**M/s. JAYASHREE THEATRE**
**M/s. RAVI PRIYA THEATRE**
PAPPIREDDIPATTI - (P.O.) 636905
HARUR (TK) DHARMAPURI (DT)

**BEST COMPLIMENTS FROM**

Grams: "SREESANKU"
Phone: Office: 63619
M.D.: 66553

**SREE SANKU CHAKKARA MILLS (P) LTD.,**
REGD. OFFICE: No.4, RAJAJI ROAD, SALEM-636 007.

With Best Compliments From:

**Phone: Off: 463 & Res: 435**

**M/s. THANGAVELU SPG MILLS PRIVATE LIMITED**
**Mfrs. of Quality 40s & 2/40s Cotton Yarn**
**Bommidi:635301, DHARMAPURI DIST.**

Founder Chairman & Managing Director : P. THANGAVELU

Installed Capacity : Spinning 17764 Spindles
: Doubling 6096 Spindles

With the best compliments from:

**Ideal Spinning Mills Limited**

**Regd. Office:**
Ideal Garden Complex (1st Floor)
7/54, Junction Main Road
Five Roads, Salem-636 004
Phone: 77447, 7002
Telex: 0450 372 ISML IN
Gram: IDEAL, Salem-4

**Mills:**
Kumarakottam
Pattukonampatti-636 905
Harur Taluk
Dharmapuri Dt.,
Phone: 52 & 44
(Pappireddipatty)

தேறாமல் 1914-ஆம் ஆண்டு அதே பிப்ரவரி மாதம் 22- இல் காலமானார். அப்போதுதான் வள்ளியம்மைக்கு 16 வயது பூர்த்தியடைந்திருந்தது. சிறுமி தில்லையாடி வள்ளியம்மையின் தேச பக்தியைப் பாராட்டிய ஜோஹன்ஸ்பர்க் தமிழர்கள் அச்சிறுமியின் நினைவாக அங்கோர் நினைவாலயத்தை எழுப்பினர். 1914-ஆம் ஆண்டு ஜூலை 15-இல் மகாத்மா காந்தியடிகள், மிஸஸ் சாஸ் பிலிப்ஸ் தலைமையில் அதைத் திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவர் தனக்கு ஜோஹன்ஸ்பர்க் மக்கள் அளித்த ஓர் பாராட்டுக் கூட்டத்தில்:

''.....எல்லாவற்றிலும் அதிக முக்கிய மானது வள்ளியம்மை பிறந்த இடம் ஜோஹன்ஸ்பர்க். நான் உங்களிடம் இப்போது இங்கே பேசும்போது என் கண்ணெதிரில் தெரிவது அந்த இளம் தியாகச் சிறுமி வள்ளியம்மையின் திருவுருவந்தான். சத்திய இலட்சியத்திற் காக வள்ளியம்மாள் தனது உயிரையே தியாகம் செய்தார். இலட்சியத்தில் குருட்டு நம்பிக்கைக் கொண்டவள். இவளைப் போலவே உயிர்த் தியாகம் செய்துவிட்ட தமிழ் இளைஞர்களாகிய நாகப்பனையும், நாராயண சுவாமியையும் பெற்றெடுத்த பூமி இந்த ஜோஹன்ஸ்பர்க் தான்! ஆகையால் புகழுக்கும், பாராட்டு தலுக்கும் உரியவர்கள் யாராவது உண் டென்றால் போராட்டத்தில் உயிர் நீத்த அந்த மூவருமே அதற்குரியவராவர்!'' என்றார்.

1934-ஆம் ஆண்டு காந்திஜி தமிழ்நாடு சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது தனது பிரச்சாரங்களில் எல்லாம் ''தில்லையாடி வள்ளியம்மை''யைப் பற்றிப் பேசிய பின்புதான் பிரச்சாரத் தையே முடிப்பார். தில்லையாடிக்கு காந்தியடிகள் 1934 பிப்ரவரி 9-ஆம் தேதி வந்திருந்தபோது அங்குள்ள மக்கள் அவருக்கு மகத்தான பாராட்டுதலையும் படித்து அளித்தனர். இந்த இளம் வீரத் தமிழ்ப் பெண்மணியை நினைவுகூரும் வகையில் 1969-ஆம் ஆண்டு அக்டோபர் 22-இல் தியாகிகளின் மூதாதையோரின் பூர்வீகக் கிராமமான ''தில்லையாடி''யை ஓர் மாதிரி கிராமமாக ஆக்கும் பணியை அன்றைய தமிழக அரசு தொடங்கி வைத்தது. அங்கு தியாக தீபமாகிய வள்ளியம்மைக்கு ஓர் நினைவாலயமும் ஏற்படுத்தியது. இன்றும் அது சிறப்புடன் விளங்கி வருகிறது.

''தில்லையாடி'' வள்ளியம்மையின் மாபெரும் தியாகத்தின் பெருமையும் என்றென்றும் நினைவுகூரும் வகையில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுற வுச் சங்கம் ('கோ-ஆப்டெக்ஸ்') தனது 600-வது புதுமனை விற்பனை நிலை யத்தை சென்னை எழும்பூர் பாந்தியன் சாலையிலுள்ள அங்காடிக்குத் 'தில்லையாடி வள்ளியம்மை மாளிகை' எனப் பெயரை யும் சூட்டிப் பெரும் மகிழ்வு கொண்டுள் ளது. இந்த ஆண்டு (1993) பிப்ரவரி 22-ஆம் தேதி ''தியாக தீபம் தில்லையாடி வள்ளியம்மை''யின் 80-வது நினைவு ஆண்டு நிறைவடைவதை முன்னிட்டு, அந்தத் தியாகச் சிறுமிக்கு நினைவாஞ்சலி செலுத்துவது தமிழர்களாகிய நம் அனை வரின் முதல் கடமையாகும். •



உலக வங்கி உதவியுடன் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை பார்வையிட சென்னை வந்த உலக் வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு. எர்னெஸ்ட் ஸ்டெர்ன் மற்றும் புதுடெல்லியிலுள்ள அவ்வங்கியின் தலைமை அலுவலர் திரு. ஏக்டே யெனால் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்துப் பேசினார்கள் (18.2.'93).

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

ஜெயஸ்ரீ தியேட்டர்

பாப்பிரெட்டிபட்டி

தருமபுரி மாவட்டம்

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

ரவிப்பிரியா தியேட்டர்

முக்காரெட்டிபட்டி

தருமபுரி மாவட்டம்

எங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீசங்கு சக்கரா மில்ஸ்

(பி) லிமிடெட்

புதுரெட்டியூர், கடத்தூர்

தருமபுரி மாவட்டம்



ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

M 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு





